
திராவிடத்துப் பரணி



கி. அரங்கசாமி

திராவிடத்துப் பரணி

இஃது
திருக்குறள் அந்தாதி — தமிழின் உயிர்நாடி
திராவிட ஆட்சிமுறை 333 — தமிழன் உலா
புலவர்விடு தூது — அறநெறித் திருப்புகழ்
மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ்
அன்புக் கலம்பகம்
வாழ்வியல் அருட்பா ஆகிய

நூலாசிரியர்:
கவிஞர் கி. அரங்கசாமி அவர்களால்
ஆக்கப்பட்டது.

★

வெளியிடுவோர்:
திருக்குறள் பதிப்பகம்,
இ ரா சி பு ர ம்.
(சேலம் மாவட்டம்)

விலை. ரூ. 2—00


1961,

முதற் பதிப்பு படி—1000. 1961 ஜுலை.

அச்சிட்டோர்:

ஸ்ரீ தனலக்ஷ்மி பவர் பிரஸ்,

இராசிபுரம்.



இந்நூலாசிரியர் கவிஞர் **கி. அரங்கசாமி** அவர்கள்.

ஆசிரியர் முன்னுரை.

தொன்று தொட்டே புலவர்கள், நம் நாட்டின் வரலாற்றை பண்பாட்டை, நாகரீக வளர்ச்சியை, வாழ்க்கைச் சிறப்பை, தமிழ் மொழியாம் பெட்டகத்துள் அடுக்கி அடுக்கி வைத்தனர். அக்கருத்துக் குவியலின், என் — வரலாற்றுப் படைப்பின் — மொழித் திறனையே மொழி வளர்ச்சி எனவும், இலக்கிய வளர்ச்சி எனவும் கருதினர்.

நாட்டின் நிலையை செய்யுட்களில் அடுக்கும் திறன் ஒன்றே திராவிடத்தின் சிறப்பை உணர்த்த சாலும். நம் முன்னோர்கள் இம்முறையை ஆக்கி காத்து வளர்த்து வந்தனர். இடைக் காலத்தில் ஈண்டு வந்தவர்கள் ஆதிக்கம் பெற்று வலுப்பெறவே இந் நாட்டின் சிறப்பான கலை அங்கங்கள் சிதைந்து சீர்கெட்டுப்போயின.

செய்யுட்களுக்குச் சிறப்புண்டு; இது திராவிட நாகரீகத்தில் ஒன்று. செய்யுள் அமைப்பு, உணர்ச்சியுள்ள உள்ளங்களைச் சந்தித்து, பற்றிப் பரவி, படரும் ஆற்றல் உடையது; மறவாது நினைவிலிருத்த ஏதுவானது.

கவிஞர்கள் நாட்டின் நாகரீக வளர்ச்சியின்பால் பற்று கொண்டு தெரிந்து தெளிந்து முடிவான கருத்துக்களை துணிந்து கூறும் திறம் உடையவர்கள். நாட்டுணர்ச்சிமிக்கோர் அத்தகு

கவிஞர்களின் தொடர்பு கொண்டு கருத்துக்களைக்கூறி அவர்தம் ஆற்றல் திறத்தினை எடை போட்டு மகிழ வேண்டும்.

பண்டைய மரபினைத் தழுவி, அறிஞர் குழாத்தின் தொடர்பு கொண்டு, இந்நூற்றாண்டின் திராவிடத்தை விளக்குவதே இத் **''திராவிடத்துப் பரணி''** யின் நோக்க மாகும். தமிழிலுள்ள பல சுவைகளுள், வீரச் சுவைமிக்கதே பரணி நடையாம். பரணியின் முடிபு வெற்றி. அவ்வெற்றியைப் பல அங்கங்களால் விளக்குதல் பரணியின் முறைமை அழகாம். அங்ஙனம் புதுமை பொலிவுடன் பழமை தழுவியதே இப் பரணி ஆகும்.

நம் தென்னகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே சிறப்புமிக்க நாகரிகமொடு தனி ஆட்சியில் தன்னிகரற்று விளங்கியது. திராவிடம் ஆரிய ஆதிக்கத்தின்கீழ் சிக்கித்தாழ்ந்த தெனினும் ஆங்கிலேயர் காலத்திலேயும், முடிமன்னர் ஆட்சியின் கீழ் தனித்திருந்து வளர்ந்தது. ஆங்கிலேயர் சென்றபின் முடி மன்னர்களின் தனி ஆட்சி ஒழிக்கப்பெற்று, இந்தியா என்ற அமைப்பு உண்டாகியது. இந்நிலையில் திராவிட இன உணர்வு மங்கி மாய்ந்துவிடுமோ என்ற ஐயம் சற்றோர் உள்ளத்தே கிளர்ந் தெழுந்து அத்தகையோர் விழிப்புணர்ச்சி முனைந்து முயன்றதன் வெற்றியே இப் பரணி ஆகும்.

திராவிடம் இந்தியா என்ற பெயரில் இணைந்து, தமிழ் இந்தியில் கலந்து, நாகரிகம் பலவாறுகச் சிதருண்டு, நாடும் மொழியும் நாகரிகமும் சிதைவு பெற்றுள்ள இன்றைய நிலையில் திராவிட நாடு தனி ஆட்சி நடத்த வேண்டும். தமிழ் மொழி தனித்தியங்க வேண்டும். திராவிடர் வாழ்வு சிறக்க வேண்டும் என்ற உணர்ச்சி கொழுந்துவிட்டு வளருகிறது, கிளை கிளையாகப் படருகிறது.

இந்நிலையில் நம் நல்ல குறிக்கோள்களைப் பாட்டுருவிலே, செய்யுள் நடையிலே ஏடுகளிலே நிலைநிறுத்த வேண்டும் — இன்றுள்ள நூற்கள் ஆட்சி உரிமை, வாழ்வு முறை, பொருளியல், கட்டுப்பாடு, இன ஒற்றுமை, தொழிற்பெருக்கம் போன்ற அறமுறைகளை, அறிவுரைகளை, ஆக்க வழிகளை வகுத்தளிப்பதில் குறைபாடு கொண்டனவாய் உள்ளன.

நன்னூலிலக்கனம் — மக்கள் தேவர், நரகர் எனப்பிரிக்கிறது
திருக்குறள் பரிமேலழகர் உரை — அறம் என்பது மநு முதலிய நூற்கள் கூறுவது என்கிறது
கலிங்கத்துப் பரணி — வேதங்களைக் கட்டிக்காக்கவே குலோத்துங்கன் பிறந்தான் என்கிறது
பாரதக் கதை — இராமாயணக் கதை வடவருடையது
சிலப்பதிகாரம் — ஆரியத் திருமணத்தை ஊட்டுகிறது
அசுரரை அழித்த வெற்றியைப் பாடுவதே தோத்திரம் துதி

இம்முறையில் உள்ள நூற்களைக்கொண்டு மாணவர்க்குத் தமிழ்ப் பயிற்சி கொடுத்து தமிழை வளர்ப்பதென்பது வடவராதிக்கத்தை வளர்ப்பதே ஆகும். இக்குறைபாட்டைப் போக்க தமிழ்ப் புலவரினம், கவிஞரினம், புலவரினம் ஆகியவை தற்கால உலகில் தனிச் சிறப்போடு நம்நாடு தலைதூக்கி நிமிர்ந்து நிற்க ஏற்ற ஏடுகளைத் தருவது நல்லது. அதற்கு எடுத்துக்காட்டே இத் திராவிடத்துப் பரணி.

அகம் என்றால் காமமா? புறம் என்றால் போரா?

அகத்தில்தானே அறிவு இருக்கிறது. புலமையின் ஆட்சி, அரசு, அமைச்சு, திறமைகள் அத்தனையும் அகத்தின் விளைவு தானே. அக நூற்களென்று காமத்தையே பாடியதனால் எவ்வளவு முன்னேற்றம் தடைப்பட்டு வீணாயிற்று.

புறப்பொருள்கள் என்றால் போருக்குரிய மாலைகளும் நிகழ்ச்சிகளுமேதானா? உலோகப் பொருள்கள் யாவும் புறத்தில் தானே இருக்கிறது. வாழ்க்கைக்குத் தேவையான எவ்வளவு புதுமைகளை விளக்கி இருக்கலாம், அதனை மறைத்து சண்டைக்குரிய குணத்தை மட்டும் வளர்த்ததனால் தமிழர்கள் உள்ளம் பிரிந்து பிளவுபட்டு பகைமை நோயிற்காளாகி நிற்கிறது என்றால் இத்துணைத் தமிழ் நூற்களால் எப்படி ஒரு நாடு முன்னேறும். இத்தகு குறைபாடுகளை நீக்கி மனித வாழ்வுக்குத் தேவையானவற்றை உணர்த்தி ஒன்றுபட்ட நிலையை வளர்ப்பதற்கே இத் திராவிடத்துப் பரணியை இயற்றி உள்ளேன்.

வளமுள்ள திராவிடம் — வரலாறுள்ள திராவிடம் பல சிறப்புகளைக்கொண்டது என்பதை நிலைநாட்டும் திராவிடத்துப் பரணியை அனைவரும் வரவேற்பர். அறிவுலகம் வரவேற்கும் என்று நம்புகிறேன். வணக்கம்.

இராசிபுரம்.
1—6—1961

கி. அரங்கசாமி.

மதிப்புரைகள்.

திரு. புலவர். ஞா. தேவநேயப் பாவாணர் M. A., அவர்கள்
(தமிழாய்வுத்துறை வாசகன் - அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

பரணி என்னும் பனுவல்வகை முதலாவது ஒரு பேரரசன் அடைந்த பெரும்போர் வெற்றியைப் புகழந்துபாடும் நூலாக எழுந்தது. கலிங்கத்துப் பரணி அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இடைக்காலத்தில் மக்கள் மனம் மதத்துறையில் ஆழ்ந்து ஈடுபட்டபோது தேவர் பரணித் தலைவர் ஆயினர். அத்தகைய பரணிக்கு "தக்க யாகப் பரணி" சிறந்த எடுத்துக்காட்டாம்.

சிறந்த மெய்ப்பொருளறிஞர் பரணியாசிரிய ரானக்கால், ஆதன் (ஆன்மா) அறியாமையை அல்லது தீவினையை வென்ற வெற்றியே பரணிப் பொருளாகக் கொள்ளப்பட்டது. இதற்குப் பாசவதைப் பரணி சிறந்த எடுத்துக்காட்டாம்.

இங்ஙனம் ஓர்அரசன் வெற்றியும், ஒரு தெய்வத்தின் வெற்றியும் ஓர் ஆதனின் வெற்றியுமே இதுவரை பரணி நூல்களிற் பாடப்பட்டு வந்தன. இன்று புதுமையாக திராவிடத்துப் பரணியாசிரியர் திருக்குறள் **அரங்கசாமியார்** ஓர்இனவெற்றியைப் பரணிப் பொருளாகக் கொண்டு திறம்படப் பாடியுள்ளார்.

எடுத்துக்கொண்ட பொருட்கேற்பப் பரணி சந்தங்கள் மாற்றப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கூளி காளிக்குக் கூறியது என்பது திராவிட முனிவர் மாணவர்க்குக் கூறியது என்றுள்ளது. இப்பனு

வலில் தமிழ் நாட்டின் பெருவளமும், திராவிடரின் தலைசிறந்த நாகரீகமும், ஆரிய ஏமாற்றமும், அதனல் தமிழர் அடைந்த அடிமைத்தனமும்; நீதிக் கட்சியின் ஆட்சியினுலும் சில புலவரும் தலைவரும் செய்த போராட்டத்தினுலும், திராவிடர் கண் திறந்து மீண்டும் தலைநிமிர்ந்து தன்மானத்தொடு நிற்கும் பெருமிதமும் மிக அழகாக வண்ணத்தில் பாடப்பட்டுள்ளன.

இப்பனுவலில் வரும் பல்வேறு வண்ணங்களையும், ஒழுகிசையாக வரும் அழகிய சொற்றொடர்களையும், புத்தம் புதுக்கருத்துக்களை யும் நோக்கும்போது இதன் ஆசிரியர் இறைவனின் திருவருளால் ஏவப்பட்டவரென்றே தெரிகின்றது. திராவிடர்களனைவரும் இப் பாணியை வாங்கிப் படித்து ஓர் ஆருயிர் மருந்தாகப் போற்றிக் கொள்வாராக.

அண்ணுமலை நகர்
22—6—1961

ஞா. தேவநேயன்.

திரு. மா. கி. தசரதன் M. A., அவர்கள்

(விரிவுரையாளர் பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி)

இராசை கி. அரங்கசாமி அவர்களை இலக்கிய உலகம் இன்று நன்கு அறியும். பெருக்கெடுத்து பொங்கிவரும் திராவிடப் புத்துணர்ச்சிக்கு இலக்கிய வடிவங்கள் தந்து வாழவைக்கும் வல்லமை பெற்றவர். அந்தாதி, தூது, உலா போன்ற பண்டைய இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி மரபு கெடாமல் போற்றி புத்தம் புதிய கருத்துக்களை அளித்துவருபவர்

இதுபோது பரணி முறையைக் கைக்கொண்டு பண் இசைக்கிறார். களத்திலே ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பாராட்டிப் பாடுவது பரணி. இன்று போருக்கெனத் தனிக்களமும் இல்லை; களிறுகொல்லுவது மட்டும் வீரம் என்று கருதுவதும் இல்லை. நாட்டுக்கு உழைக்கும் நல்ல பணியில் எதையும்—சொல்லையும், கல்லையும் தாங்கும் இதயம் பெறுவதே வீரமும் வேண்டப்படுவதும் ஆகும். நாகரீகத்தின் நல்லீடமான திராவிடத்தைப் பற்றிப்பாடி அதன் தளை ஒடிக்கும் பணியில் பாடுபட்டு வருவோர்பற்றிக் கூறி, எதிர் காலத்தவர்க்கும் இன்றுள்ளோர்க்கும் எழுச்சியூட்டும் தொண்டினைப் புலவர் அரங்கசாமி அவர்கள் செய்துள்ளார்,

அவருடைய உழைப்பு வெல்க! தக்க பலன் தருக.

காஞ்சீபுரம்
17—6—1961

அன்புள்ள,

மா. கி. தசரதன்.

தமிழ்ப் பேராசிரியர் முதுபெரும் புலவர்

திரு. அந்தணர் க. நடேச உடையார் அவர்கள்

திராவிடத்துப் பரணி ஆசிரியர் இராசை கி. அரங்கசாமி அவர்கள் காரிகை கற்று கவிபாடியவரல்லர். இளங் குழந்தைகள் விளையாட்டில் இன்பங்காண்பது போலப் புதுப் புது நடையும் இசையும் பொருளும் அமையக் கவி விளையாட்டியற்றிக்களிப்பவர். கவிதை இன்பங் காண்பவர். காட்டுபவர். இந் நூலில் பயின்றுவரும் பல்வகை வண்ணங் களும் ஒழுகிசையும் எளிதில் அமைந்து அழகு பயக்கும் தொடைநயமும், சொல்லடுக்கும் பொருள்மினுக்கும் இவர் கவிபாடும் திறல் கருவிலே அமைந்து பிறந்த திருவாளர் என்பதை மெய்ப்பிக்கும்,

இவர் இந்நூலில் புதியமுறையில் தொகுத்திசைக்கும் அரும் பொருளிற் பல தமிழகத்துக்குப் பொதுப்பட நலம் விளைப்பன. அறிஞருலகத்துக்கும் உவப்பளிப்பன. இவர்தம் போக்கும் பணியும் போற்றத்தக்கன.

பலரும் படித்துச் சிந்தித்துத் தெளிந்து நிலைத்துப் பயனுற வேண்டுமென்று விழைகின்றேன்.

சிவப்பிரகாச நிலையம்
சேலம்-1.
23—6—1961.

அன்புள்ள,

க. நடேசன்.

தமிழ் நெறிக் காவலர், முதுபெரும் புலவர்

பேராசிரியர் திரு. **மயிலை சிவமுத்து** அவர்கள்.

"திராவிடத்துப் பரணி" என்னும் நூலை இராசிபுரம் கவிஞர் **அரங்கசாமி** அவர்கள் மிகவும் ஆர்வத்தோடு இயற்றி இருக்கின்றனர். எந்தக் கட்சியிலும் கலவாமல், தமிழ் மொழியையும், தமிழ் நாட்டு மக்களின் முன்னேற்றத்தையுமே ஆதரித்து தொண்டு புரிந்துவரும் என்னை அவர்தம் நூலுக்கு ஒரு பாராட்டுரை எழுதித்தரும்படி கேட்டுக் கொண்டார். நமது கவிஞருக்கு தமிழ் மீதும், தமிழர்கள் மீதும் உள்ள பேரவாவினை இந்த நூல் தெள்ளத் தெளியக் காட்டுவதாக விளங்குகின்றது.

அடியோ முடியோ இலதாகி அறிவே இறையாய் விளங்குகிறது என்று துவக்கத்திலேயே இறை வணக்கம் என்னும் பகுதியில் நமது புலவர் தம் கொள்கையை விளக்கமாகக் காட்டியிருக்கிறார்.

கடைத் திறப்பு என்னும் உறுப்பில் பிற புலவர்கள் காமச்சுவை ததும்பப் பாடுவார்கள், நம் புலவரோ புதுமுறையில் மொழி மகளிர், புலமை மகளிர் என்றெல்லாம் தலைக்குறிப்பிட்டுத் தமிழன் வளத்தையே சுறப்பித்துப் பாடுகிறார். **கோவில் பாடியது** என்னும் உறுப்பில் பழங்காலத்து தமிழர்களின் அரண்மனைகளின் சிறப்பையே பாடியிருக்கிறார். தேவியைப் பாடியது என்று செயங்கொண்டார் பரணியில் வரும் உறுப்பிற்குப் பதிலாக **எழுச்சி பாடியது** என்னும் உறுப்பை அமைத்து மக்களுக்கு உள்ள, உள்ள எழுச்சியினை இப் புலவர் பலவகையில் விளக்கிப் பாடுகின்றார்.

எழுச்சியை வடவர் காளிஎன்பர்
ஏதும் செய்யும் கூளிஎன்பர்

என்று வடநாட்டுக் கொள்கையை மறுத்து

அறிவுடை யோருக் கெழுச்சிவரின்
அருள்பெறும் முறைபல அருளுவரே

என்று தம் கொள்கையை நிலைநாட்டுகின்றார்.

பேய்களைப் பாடியது என்பதற்கு பதிலாகப் **பேய்க் குணத்தைப் பாடியது** என்று இப்புலவர் தம் பகுத்தறிவுக் கொள்கைக்கு எற்பவும் பாடியிருப்பது பாராட்டத்தக்கது.

பேயெனத் தனியொரு வடிவிலதே
பேசிப் பயனிலை செயல்கெடுமே

எனும் சொற்றொடர்களே இவர் தம் கொள்கையை விளக்கிக் காட்டுகின்றது. இவர் தம் பாடல்கள் ஆற்றொட்ட நடையிலே இனிமை ததும்ப அமைந்திருக்கின்றன. **திராவிட முனிவர் மாணவருக்குக் கூறியது** என்று தம் கொள்கைக் கேற்ப ஓர் உருப்பினை அமைத்துக்கொண்டு நம் தமிழ் மொழியின் சிறப்பினையும் நம் தமிழர்களின் பழங்கால உயரிய நிலையினையும், ஒரு புதுமுறை யிலே இவர் மாணவர்க்கு விளக்கிக் கூறுகின்றார்.

இந்நூலிலே நம் நாட்டின் பழங்கால வரலாறுகள்; இக்கால வரலாறுகள் ஆகிய இரண்டினையும் தொகுத்துச் சொல்லி இருக்கின்றார்

தமிழை வளர்க்கத் தருமபுர ஆதீனம், திருவாடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், குன்றக்குடிகள் ஆதீனம் முதலிய

ஆதீனங்கள் பாடுபட்டுவரும் நிலையை விளக்கிக் கூறுவது இவருடைய பரந்த உளப்பான்மையைக் காட்டுகின்றது. தமக்கு விருப்பமான ஒரு கொள்கையைப் பாராட்டுவதுபோல் மேல்போக்காகத் தோன்றினும் ஆழ்ந்து பார்க்கும்போது தமிழ், தமிழ் நாடு, தமிழர் வாழ்வு இவைகளே இவர்தம் உயிர்நாடி என்பது இந்நூலிலிருந்து எவரும் தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ளுதல் கூடும்.

இன்னும் **போர் பாடியது** என்ற தலைப்பில் திரு. காமராசர், ம. பொ. சி., சீவானந்தம், முதலிய அரசியல் தலைவர்களைப்பற்றி பாடியிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். பல அரிய நூல்களை இயற்றி முன்பே பேரும் புகழும் பெற்றுள்ள இப்பெரியார் வெளியிடும் இந்நூலுக்கு ஒரு பாராட்டுரை எழுத எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

இப்பெரியாரின் தமிழ்த்தொண்டு, அறிவு விளக்கத் தொண்டு, ஆராய்ச்சித் தொண்டு முதலியன யாவும் மென்மேலும் வளரப் பொதுமக்கள் பெரிதும் ஆதரவு அளிப்பார்களாக.

சென்னை.
20—6—1961.

அன்புள்ள,

மயிலை சிவமுத்து.

புலவர் திரு. **பொன்னிவளவன்** அவர்கள்.

முதுபெரும் புலவர் இராசை கி. **அரங்கசாமி** அவர்கள் எழுதிய "திராவிடத்துப் பரணி" யைக் கண்ணுற்றேன் பரணி பாடிய பரம்பரை நாம். பரணி பாடினோம். பாடிய பரணிகளில் வீரம் இருந்தது. தீரம் இருந்தது, விவேகம் இருந்தது, வேகம் இருந்தது ஆனால் பகுத்தறிவுக்கு ஒத்து வராத காளியும் பேய்களும் தலைவிரித்தாடிய ஆட்டங்களின் தாங்க முடியாத வேதனைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டி யிருந்தது நாம். ஆனால் இந்தப் புலவர் பழமையில் புதுமை தேக்கிப் பகுத்தறிவுப் பண்பு கெடாமல் கருத்துக்களைத் தொகுத்து வகுத்து முறைப்படுத்தித் தேவையான நேரத்தில் தேவையான கருத்தைத் தெரிவிக்கும் சேவையில் ஈடுபட்டிருக் கிறார்.

பரணியின் ஆசிரியத்தாழிசை அமைப்பு முறையின் அருமை அறிந்தவர்களுக்குப் புரியும், அதைப்பின்பற்றி எழுதுவதில் உள்ள தொல்லை. சந்தம் கெடாமல் சந்த வேகத்தில் கருத்துக்களை ஓடவிடுகிற அழகும் புதிய சந்தத்தைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிற விருத்தங்களை இடையிடையே திணித்திருக்கிற எடுப்பும் **அரங்கசாமி** அவர்களின் புலமையின் திறத்தையும், தரத்தையும் காட்டுகின்றன. எழுச்சிபெற்ற திராவிடம் ஏற்றம் பெற இவர் எழுதியளிக்கும் **பரணி** பயன்படும். எனவே கொள்கை வழி நிற்போரே! இவரது பரணியை வாழ்த்துங்கள் வரவேற்பு கொடுங்கள்.

சிதம்பரம்.
18—6—1961

அன்பன்,
பொன்னிவளவன்.

புலவர் திரு. **அறிவுடைநம்பி** அவர்கள்.

கருத்துத் தோட்டம்!
இலக்கியச் சோலை!!
இலக்கணத்திற்கு அரண்!!!
பழமை மரபு!!!!
புதுமைப் போர்வை!!!!! ......இவை

பழம்பெரும் புலவர் இராசை திரு. **கி. அரங்கசாமி** அவர்கள் எழுதியுள்ள "**திராவிடத்துப் பரணி**" யின் அணிகலன்கள்.

காடு பாடியதில் ஆசிரியர் மண்ணின் வளத்தைக் காட்டும் பாடல் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

தெற்கு வந்து போரிட்டோர்
தேய்ந்தே போனர்
வடக்குசென் றோர்முறையாய்
வென்றே வந்தார்

தெற்குதக்கோர் வாழ்வினுக்குச் சிறந்தபூமி
வடக்குத்தான் போர்க்களத்தின் வாய்ப்பதாமே

இப்படி ஒன்றல்ல, ஒவ்வொன்றும் தேன்துளிகள்.

இப் பரணியை நாட்டுக்கு வழங்கி, நலிந்தோரின் வாழ்வுக்கு வலிவுதேடி, மொழிக்கு ஆக்கம் சேர்க்கும் தமிழ்ச் சான்றோர் அரங்கசாமியார் பல்லாண்டு வாழ்ந்து பயனுறு பணிகள் இயற்றுவாராக.

தஞ்சை.
18—6—1961.

அன்பன்,
அறிவுடைநம்பி.

திருமதி புலவர் **வேலம்மையார், M. A.,** அவர்கள்.

ஆயிரம் யானைகளைக் கொல்லவுமில்லை, அடுத்து வானிலே காணும் பரணி விண்மீனன்று பாடவுமில்லை, கொல்லும் படைக்கலன்கள் அடுக்கிய பரண்மீது இராசை கி. **அரங்கசாமி** அரங்கம் ஏறவுமில்லை, இருந்தும் "**திராவிடத்துப் பரணி**" பாடியுள்ளார்.

ஆயிரமாயிரம் மூடப் பழக்கமெனும் மத யானைகளை வீழ்த்தியுள்ளார். திராவிடப் பண்பெனும் பரண்மீது நின்று இன உணர்ச்சியைத் தட்டி எழுப்பி உள்ளார். தள்ளாத வயதிலும் தான் பிறந்த நாட்டின் தனித்த நற்பண்புகளைத் துள்ளித் திரியும் இளந் திராவிடன் எடுத்தோதுவதுபோல் பாநலஞ் சிறக்க தன் நாநலந் தோன்ற மிடுக்காகக் காட்டியுள்ளார்.

கவிஞரின் திராவிடத்துப் பரணி திராவிடத்திற்குத் தனித்த ஓர் பேரணி.

தேவக்கோட்டை,
18—6—1961.

அன்புள்ள,

வேலம்மையார்.

அரும்பெயர் அகர வரிசை.

(எண் – செய்யுள் எண்)

இடப்பெயர் அகர வரிசை

(எண்–செய்யுள் எண்)

"திராவிடத்துப் பரணி"

இறை வணக்கம்

ஈரடித்தாழிசை

அடியோ முடியோ இலதாகி
அறிவே தருபேர் இறையாகி
படிமீ தருளாய் நிறைவான
பழம் பேரிறையைப் பணிவோமே 1

ஒன்றாய் ஒளியாய் ஒலியாகி
உயர்நிலை யாகி முறையாகி
நன்றும் வழியாய் நாயகமாம்
நல்லிறை தன்னை வணங்குதுமே 2

உடலும் உயிரும் ஒன்றாகி
ஒரு வழியூடே உயர்வதுபோல்
கடவுள் உலகம் ஒன்றாகும்
கருணை வாழ்வினைக் கருதுவமே 3

கணவன் மனைவி ஒருள்ளக்
கருத்தொடு மனையறம் காப்பதுபோல்
குணமும் இறையும் ஒருநிலையாய்க்
குலவிட நாளும் வாழ்த்துதுமே 4

கண்க ளிரண்டும் ஒன்றுறவே
கருதும் பொருள்தனைக் காணுதல்போல்
எண்ணமு மிறையும் ஒரு தனியாய்
எல்லாம் செய்திட இறைஞ்சுதுமே 5

இருளிலாத திரவிடமதே புவியில்
இணையிலா துகோ லோச்சிடவே
திருவினா லுயரு மருளினோ டுறையுந்
திறல்பே ரிறையைச் சிந்திப்பாம் 6

வளமார் திராவிட நாட்டினிலே
வகையாம் தமிழ்மொழி கூட்டாட்சி
விளைவே இறைமையின் பயனாகி
விரிவே பெறநனி வேண்டுதுமே 7

குடிமை காக்கும் குலமகனின்
குடிமை காக்க முந்திடுவோய்
மடிமை நீக்கும் நிறைமகளின்
மனைவாழ் இறையை வணங்குதுமே 8

தேவைகள் யாவும் தெளிவினொடு
தேர்ந்துத் தந்தாய் திறனுறவே
யாவையு மானாய் நிறைவானாய்
இறையோய் என்றே இறைஞ்சுதுமே 9

திருநிறை நலனில் திகழ்செழு மழகே
திருவினில் மகிழ்வுறும் அருள்கலையே
திருநில முதலே திருவுளமுடிபே
திராவிடப்பரணியைத் தேர்ந்தருளே 10

கடை திறப்பு

போருக்குச் சென்ற வீரர்கள் குறித்த காலத்தில் வராமையால் வீரர்களின் மனைவிமார்கள் உள்ளங்கலங்கி போர் நிகழ்ச்சியை அறிய முடியாமல் திகைத்துக் கதவைத் தாளிட்டுக்கொண்டு ஏக்கத்துடன் இருக்கிறார்கள்.

இதை அறிந்த அரசவை முனிவர், இல்லந்தோறும் சென்று போரின் திறத்தையும், இந்நாட்டின் வீரப் பெண்மணிகளின் சிறப்பையும் எடுத்துக்கூறி விளக்கி வருகிறார்.

இந்நிலையைக் கூறும் அதிகாரம் "கடை திறப்பு" எனப்படும். அதாவது "கதவைத் திறவுங்கள்" என்று அழைப்பதாகும். இந்நூல் பன்முறை நடந்த பல போர்களையும், திராவிடத்தின் சிறந்த வெற்றியையும் விளக்குகிறது. அந்தந்த போரின் தலைவரும், வீரர்களும் காலந் தாழ்த்தி வந்த நிலையில் கடை திறப்பு நடந்ததைப் பொதுவாகக் கூறுகிறது.

மனை மகளிர்

இல்வாழ் வொன்றே நல்வாழ்வாய்
எண்ணித் தம்மனை தனிலினிதாய்
நல்வாழ் வினிலே அகமகிழும்
நங்கை நல்லீர் கடைதிறவீர் 11

மொழி மகளிர்

என்றும் பிரியா எழில் கணவன்
இந்தியை எதிர்த்து சிறைசென்று
இன்னும் வாரா திருப்பதனுல்
ஏங்கி இருப்பீர் கடைதிறப்பீர் 12

இதுவுமது

மானம் காக்கும் திராவிடரின்
மதியை மறைத்த ஆரியப்போர்
கானம் காக்கும் கனிவுடைய
கணவன் செய்தி கடைதிறமின் 13

நிறை மகளிர்

அன்புக் கனியாய் கொழுநர்தமின்
அகத்தி னுரமாய் அழகொழுகும்
இன்பத் துணையாய் வழியமையும்
இதயப் பொறையீர் கடைதிறவீர் 14

சுவை மகளிர்

விழைவின் கருநிறை சோருக்கி
விரைசூழ் அறுவகைக் கறிகளொடு
கொழுநன் வரவினை எதிர்பார்க்கும்
கோதையர் காள்நும் கடைதிறவீர் 15

எழில் மகளிர்

தந்தச் சீப்பினில் முடிநிறுவி
 தகுதிக் கொத்த சடைபின்னி
செந்நிற கருப்புப் பொட்டிட்டு
 சிறந்தே வாழ்வீர் திறவீரே 16

காதல் மகளிர்

ஊடிப்பலமுறை கூடிக் குலவிட
 தேடித்துணைவோர் வருநேரம்
பாடிப்பலமொழி சூடும் குலமகள்
 பண்டைப் பெற்றீர் கடைதிறவீர் 17

அற மகளிர்

வள்ளுவ னீந்தத் தெள்ளிய குறளின்
 வாய்மையைப் பாடித் தாலாட்டும்
தெள்ளிய மதியால் இல்லறங் காக்கும்
 திறலுடை. யீர்கடை திறந்திடுவீர் 18

இதுவுமது

தன்னைக் காத்தல் தென்னறமே
 தவறும் பலர்மணம் வடவறமே
இன்பைக் கூட்டல் தமிழறிவாம்
 இயல்பைக் கற்றீர் கடைதிறவீர் 19

இதுவுமது

வீட்டுக் கடவுள் கணவரென
நாட்டுக் கடவுள் ஆட்சியென
நாட்டத் தொழுகும் பெண்மணிகாள்
வீட்டுக் கதவந் திறவீரே 20

புலமை மகளிர்

திருநிறை நாட்டின் பழமை யொழிந்து
தீயவை துளிர்பெறு நிலையினிலே
திறமையின் தீரர் திறலுடை வீரர்
திருக்குறள் தந்தார் வள்ளுவராய்
தருமொரு குறளைத் தகுமெரி மூட்டித்
தணலெரி தருணம் தகுகணவர்
திடமுள போர்செய் தழலவித் தின்பத்
திருக்குறள் காத்தார் திறந்திடுவீர் 21

இதுவுமது

உலகவர் ஒற்றுமை மிக்கிடவே
உறவினர் நற்பணி பெற்றிடவே
உறுதிகள் பெட்புற உற்றிடவே
உறைவது தம்மனை வாழ்வெனவே
பலபல சிற்பிள வுற்றிடவே
பகையது முற்படு பற்றெழலால்
பழிதரு சொற்களை விட்டிடலைப்
பரிவொடு பெற்றீர் கடைதிறவீர் 22

எழில் மகளிர்

கைத்திற மதிலெழில் நுண்ணிழை யமைதர
கைத்திற தறிதனின் கவினமைய
கைத்திறன் வழிவரு கரைநிறை பொலிதர
கருதரு நிறமொடு நிலவிடவே
சித்திர முறையது செவ்விதில் இணையுறும்
சீலையி னுளுடல் பொலிவுறவே
சேல்விழி யிணையுற தூமொழி புனைதரும்
சீரியரே கடை திறந்திடுவீர் 23

வீர மகளிர்

மாறுபட்ட குணம் நேர்மை கெட்டநடை
மாசுபட்டமனம் குடிகொண்டு
வேறுபட்டமொழி கூறுகெட்டவளம்
வீசிவிட்டவரே கடைதிறவீர் 24

சொல் மகளிர்

கண்ணுறை மூடிடில் எதிர்நின்றும்
கண்திறந் திடில்கண் ணுள்நின்றும்
விண்ணிடை நடமிடும் கணவனுரு
விண்டே மகிழ்வீர் திறவீரே 25

இதுவுமது

வந்தார் கணவர் என்றெழலும்
வாரா ரென்றே வசைபெயலும்
சிந்தாக் கண்ணில் சிந்தியநீர்
சேர்விழி மூடீர் திறவீரே 26

திறமை மகளிர்

மனையறம் காத்திட அஞ்சுவதும்
மற்றவர் காண நாணுவதும்
வினைசெய மடமைகள் நீங்குவதும்
விளையயிர்ப் புடையீர் கடைதிறவீர் 27

சுவை மகளிர்

உணவுக் கறுசுவை கூட்டுகிறீர்
உணவுக் கணிகளைப் பூட்டுகிறீர்
உணவுக் குணவையும் ஊட்டுகிறீர்
உணவுக் கலைஞரே கடைதிறவீர் 28

திற மகளிர்

கண்வழி கணவன் கண்ணுள்போய்
கருதிய துண்ணும் காதலினை
தண்பொழில் புவியில் மொழியறியா
தகுதியைப் பெற்றீர் கடைதிறவீர் 29

அழகு மகளிர்

தங்கத் தாலணி பொங்குற் றொளிவிட
அங்கத் திடைபுரள் அணியாரம்
மங்கித் துகள்பட மிஞ்சிப் பொழியழ
கங்கத் தெழிலீர் கடைதிறவீர் 30

செயல் மகளிர்

மனையைக் காப்பீர் மதிகாப்பீர்
 மாண்பா மெனுநன் நிதிகாப்பீர்
வினையைத் தேர்ந்து விதிகாக்கும்
 விறலுடையீர் கடை திறவீரே 31

வீர மகளிர்

என்னுடை கணவர் வீரரடி
 இந்தச் சிறிய வடவரின்போர்
தன்னுடை கயமைத் தீதழியத்
 தவறுர் என்பீர் திறவீரே 32

இதுவுமது

மங்கைப் படையது கொடியேந்தி
 மடியா மாரியப் போரினிடை
செங்கைத் திறமே தோணுமுறை
 செருசெய வல்லீர் கடைதிறவீர் 33

இதுவுமது

வடநிலமுடையோர் தொடராட்சி
 வந்தத னுலிப் பஞ்சமது
நடமிடு கிறதெனு முறையுணரும்
 நங்கைய ரேகடை திறவீரே 34

மொழி மகளிர்

இனிதா மிளமொழி தனைப்பேசி
இடரே களைதரு மெழிலுடையீர்
மனைவாழ் கணவர் சமர்நாட
மதியே கலங்கினீர் திறவீரே 35

கணித மகளிர்

காலக்கலையைக் கணித்து செயலைக் காண்கின்றீர்
ஞாலப்புலவர் மனத்தை வென்றீர் கடைதிறவீர்

திறமை மகளிர்

தன்னைக் காத்துத் தரங்காத்துத்
தகுசுற் றங்காத் தெழில்காத்து
மன்னைக் காக்கும் மாண்புடைய
மதியுடையீர் கடை திறவீரே 37

தவ மகளிர்

உண்ணும் சுவைதனை உணராமல்
உள்ளத் துள்ளே தன்கணவன்
எண்ணும் திறலினை உள்நோக்கும்
இன்பப் பெண்காள் கடைதிறவீர் 38

கலை மகளிர்

பெண்ணின் உறுப்பிற் கழகுகளும்
பெயரும் செயலும் இயல்புகளும்
கண்ணின் வடிவுக் கிளமைகளும்
கருத்தொடு கற்றீர் கடைதிறவீர் 39

ஞான மகளிர்

நனவில் நெஞ்சினுள் தங்கியவர்
நனிநள் ளிரவுத் தூக்கமிகும்
கனவில் வெளிவரும் காட்சியினால்
களித்துப் பிழைத்தீர் கடைதிறவீர் 40

திறமை மகளிர்

தேனுங் குழையும் தூமொழியும்
தேரும் பிடியின் நடையதுவும்
மானும் மருளும் கூர்விழியும்
மானப் பெற்றீர் கடைதிறவீர் 41

விழி மகளிர்

வீரஞ் செறிந்த வேல்விழியால்
வீறிட்டெழுந்த இருநோக்கில்
கூரம் பெய்யா ஒரு நோக்கால்
குடிமை காப்பீர் திறவீரே 42

போர் மகளிர்

ஆரியத்து சூதுபன்னாள் ஆயிரமாம் வீரர்களை
அழித்தின்ன லாக்கிவரும் ஆதிக்கந் தானழிய
போரிடற்கு சென்றிடுநும் புனிதமிகு கணவர்நிலை
புகன்றிடவே வந்தனன்காண் பொற்கதவந்
[திறந்திடுவீர் 43

இதுவுமது

திராவிடத்தை பிற நாட்டினர் விடுத்
தோடிவிட்ட முறை கூறவரும்
திராவிடத்து முனி பாட்டைக் கேட்டினிது
பூட்டியக் கதவு திறவீரே 44

உணர்ச்சி மகளிர்

சிறுநேர மொன்று பெருகாலமென்று
நிறைவாகசென்று வருகொழுநர்
மறுநேரமென்று உளமூடல் நன்று
மதிகூட லென்பீர் திறவீரே 45

உரை மகளிர்

இசைபாடி வாழ்வி னெழில்தே டியாடி
இனிதான கேள்வி புலம் கூடி
இசைவான நூலைக் கசிவோடு கூறி
இருப்பீர் கதவந் திறப்பீரே 46

குறி மகளிர்

சென்றவர் வரவைக் கண்டுள மகிழ
சிலகுறி கூறிடு நன்னெஞ்சே
வென்றியில் வருவார் என்றுரை நவிலும்
விஞ்சைய ரேகடை திறவீரே 47

மொழி மகளிர்

தூயதமிழ் ஆந்திரமும் கன்னடமும் கேரளமும்
தொகை வகையாய் அறிந்தினிமை துளிர்க்கு
[மொரு செவ்வாயில்
நேயமொழி தமிழ்நாவை நிலேயெனவே பெற்றுள்ள
நேர்மையுடை மங்கையர்காள் நீவிர்கடை
[திறந்திடுவீர் 48

திறமை மகளிர்

குணத்தை திறலென வாழ்த்திடுவீர்
குடிமைக் கொத்தன ஆக்கிடுவீர்
வணக்கத் துடன்பணி நோக்கிடுவீர்
வாய்மைத் திறலீர் கடைதிறவீர் 49

தவ மகளிர்

வடக்கெனு முடக்குநமக் கிடுக்கேயென்று
சடக்கென விடுத்துநமக் கிருப்பா யின்று
திடத்தெம திடத்தைபெறப் பொறுப்பாய் நின்று
சிறப்பொடு தவத்தைபுரி திறத்தீர் திறமின்

துணை மகளிர்

கற்றுத் தெளிதரு கணவ னெடு
கற்புத் திறலின் நிறை பிணைய
முற்றிக் கலேதெளி அலுவலினை
முற்றச் செய்வீர் கடைதிறவீர் 51

விழி மகளிர்

படுக்கு மணையை நோக்காமல்
　　பாதை வழியே தன்கணவன்
நடக்கு மொலியை நோக்கியுள
　　நண்புடை நங்காய் கடைதிறமின் 52

சொல் மகளிர்

இசையினி லேழு சுரமதை கோதி
　　இனிதுற பாடி வகையாக
இசைவுற நீடு எழிலொடு வாழும்
　　இளமொழி யீரே திறவீரே 53

இயற்கை மகளிர்

பறவையினம் பாடுதலும் மிருகங்கொஞ்சும்
　　பாங்கறிந்து நிலையுயரும் பாதைசென்று
திறமைதரும் அறிவுதனில் செழுமைகாணும்
　　தெளிவுடையீர் பொற்கதவந் திறந்திடீரே 54

முறை மகளிர்

தமிழப்பெண் தலை குனிந்து கொழுநன் தனைநோக்க
　　ஆந்திரப்பெண் தலை நிமிர்ந்து கணவன்முக நோக்க
கமழக்கன்னட பெண் தனி கலையால் மனைநோக்க
　　கேரளப்பெண் பணிநோக்கிட கற்றீர்திறவீரே

உரை மகளிர்

பொருத்தம் புனையீர் திருமணமே
புரிந்து கொள்வீர் நிலையறியீர்
கருத்து தெளியீர் வாழ்வறியக்
கற்பீ ரென்பீர் கடைதிறவீர் 56

மனை மகளிர்

காணும் வரை கடுமொழியும்
காணும் பொழுதக மகிழ்வும்
பூணும் திறல் புதுமதியீர்
பேணும் கடை திறந்திடுவீர் 57

அற மகளிர்

மனைக்குத் தக்க மாண்பினளாய்
மனதுக் கொத்த துணையினளாய்
தனைக்கொண் டவனைக் காத்திடுமோர்
தகைமட வீர்கடை திறவீரே 58

துணை மகளிர்

கணவனுளங் தான் மகிழ்ந்துக்
கண்ணுறங்கத் தானுறங்கிக்
கணவ னுளங் காதலிக்கக்
கண்விழிப்பீர் கடைதிறப்பீர் 59

மொழி மகளிர்

நாட்டுத் தமிழை வீட்டுத் தமிழாய்
நாட்டித் தமிழின் சேயாகி
நாட்டுக் கரசும் வீட்டுக் கரசும்
நாட்டும் நங்காய் திறவாயே 60

மதி மகளிர்

மாசுபடாவுளம் தூசுபடாவுடல் மனையெங்கும்
மாறுபடாஎழில் கூறுகெடாப்பணி மதிதங்கும்
நேசமருமொழி வீசிசெலாநடை குறைதங்கா
நேயமொடேவுறை வாசுகிகாள்கடை திறவீரே

விழி மகளிர்

சுழலுடை மதுகர முணவினை தெரிதர
சுருதிக ளெனுமொலி யிசையினை சொலியிணை
விழிதனை மலரென பலமுறை யருகுற
மருளுறு கொடியிடை மடநலீர் திறவீரே 62

நிறை மகளிர்

ஐம்புல நுகர்வின் அணிசூடி
ஐந்தறி வறியும் பணிசூடி
ஐம்பொரு ளறிவின் திறமுடைய
தென்புல நங்காய் திறந்திடுவாய் 63

இதுவுமது

பொருளின் குணமே புரிந்துள்ளீர்
புகையின் தீமை தெரிந்துள்ளீர்
கருவியின் பயனைக் கற்றுள்ளீர்
கலைதெளி நல்லீர் கடைதிறவீர் 64

பழமை மகளிர்

திராவிடர் கண்ட திறமைகளை
திசைகளி லுள்ளோர் தெளிதரவே
திராவிட கலையின் மணையறமே
தேர்ந்திட கற்றீர் கடைதிறவீர் 65

குண மகளிர்

இரவின் குணமும் பகல்குணமும்
இடைநடு அந்தி சந்திகுணம்
வரவும் செலவும் அகம்புறமும்
வழிவழி கற்றீர் கடைதிறவீர் 66

செயல் மகளிர்

நீந்தக் கற்றீர் நெடுகடலில்
நீளப் புணைதனை விடக்கற்றீர்
காந்தக் கல்கொடு படைதடுத்தீர்
கரிபரி செல்வீர் கடைதிறவீர் 67

அரசியல் மகளிர்

ஆட்சியை ஆண்டீர் அமர்செய்தீர்
அரசியல் புலமை நிலைகண்டீர்
நீட்சியை விண்டீர் நிறைகொண்டீர்
நிலை வளமுடையீர் திறவீரே 68

பொருள் மகளிர்

தேவைப் பொருளைத் தையினிலே
திறம்பட வாங்கிச் சேர்த்திடுவீர்
நாவைக்காப்பீர் நலங் காப்பீர்
நாட்டைக் காப்பீர் கடைதிறவீர் 69

அன்பு மகளிர்

விளவின் பழமும் இளநீரும்
விரும்பும் கரும்பு சாருடனே
விளையும் நறுமண வகைகூட்டி
வேண்டிச் சுவைப்பீர் திறவீரே 70

குல மகளிர்

புலமைபெறு மறிஞர்குலம் புகழுமுயர்
[நிலையதனைப்புகழுருமல்
கலவிமுத லுருபுகளை கவிதனிலே புகழுவது
[கசடதன்றே
சிலவிளைஞ ருளமதனில் செலவறிவு கெடவுடலும்
[கெடவேசெய்யும்
சினையழகு பலரறிவர் சொலுவதிலென்
[எனுமதியீர்கதவந்திறவீர் 71

சுவை மகளிர்

பச்சைக் காய்தழை கிழங்குகளைப்
பக்குவம் செய்தே தமிழ்முறையில்
இச்சை மிகவே உண்பொருளாய்
மெச்சித் தருவீர் திறவீரே 72

அருள் மகளிர்

அறையின் சீலம் அருட் சீலம்
அணியின் சீலம் எழில் சீலம்
முறையின் காலம் முது ஞாலம்
முதன்மை பெற்றீர் கடைதிறவீர் 73

நெறி மகளிர்

உலகங் கண்டு நிலைமை கொண்டு
ஊக்கம் விண்டது அவ்வையறம்
கலகங் கண்ட நிலையில்தொண்டாம்
நலமே விண்டீர் கடைதிறவீர் 74

வீர மகளிர்

கண்ணகி வீரம் கற்றுள்ள
கற்புடை வீர நங்கையர்காள்
திண்ணமதான பெண்மை நலம்
தேர்ந்திட கற்றீர் திறவீரே 75

இதுவுமது

தாடகை வீரம் தனிவீரம்
    தாய் நாடாளும் தமிழ்வீரம்
நாடிது நமதாம் கலைவீரம்
    நாட்டிடக் கற்றீர் திறவீரே 76

மனை மகளிர்

குடிமை காக்கக் குறள்காப்பீர்
    குணமே காக்கக் குலம்காப்பீர்
வடிவைக் காக்க வளங்காப்பீர்
    வாய்மை மிக்கீர் கடைதிறவீர் 77

அற மகளிர்

நம் தென்னாடு நம்நாடு
    நவிலும் திராவிடப் பெருநாடு
செம்மைத் துளிரும் கலைநாடு
    செழிதரச் செய்வீர் கடைதிறவீர் 78

வாசுகி அம்மை வள்ளுவரை
    வாய்மை பூக்கக் காத்ததுபோல்
மாசறு நீர்மை கொழுநர்தமை
    மாண்புறக் காப்பீர் கடைதிறவீர் 79

அவ்வை நெறியைப் பின்பற்றும்
    அறிவொடு நாட்டைக் காக்கின்றீர்
செவ்வை அறமே சீர்பெருக
    செந்தமிழ் காப்பீர் கடைதிறவீர் 80

காடு பாடியது.

காடுபாடியது—இது காட்டைப்பாடியது என விரியும். காடு—ஐந்திணை-; ஐந்திணைகளைப் பாடிய செய்யுட்பகுதி என்பது இதன் பொருளாம். குறிஞ்சிக் காடு, முல்லைக்காடு, மருதக் காடு, நெய்தற் காடு, பாலைக் காடு, என மக்கள் வழக்கில் உள்ளதாலும், காட்டுக்குப் போயிருக்கிறார், என்றால் வயக் காடு, வெளிக் காடு, பூங்காடு போன்ற பலவகைக் காட்டினையும் குறித்தலாலும் ஈண்டு ஐந்திணையும் காடு என்றே கொள்ளப்பட்டது.

தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் 2-ம் சூத்திரம் 5-ம் சூத்திரத்தில் ஐந்திணையைக் கூறப்புகுந்தவர் பாலை ஈண்டு இன்மை குறித்து கூறாது விட்டனர். எனினும்,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்று சிலப்பதிகாரம் கூறுகிறபடி இவ்வதிகாரம் ஐந்திணைகளையும் சிறப்பித்துப்பாடி உள்ளது.

இந்நூல் திராவிடத்தின் வெற்றியைப் பாடுவதாதலின் திராவிடத்தின் செழித்த காடுகளின் இயல்புகளைச்சிறப்பித்துப் பாடி நாட்டின் வளத்தை விளக்கி இருத்தலை அறிக.

காடு பாடியது

சிறந்த தென்னு டயலவரால்
சிர்கெட் டிழிந்த நிலையடையப்
பிறந்த போர்கள் நடந்தனவாம்
பேரைந் திணையைப் பாடிடுவாம் 81

ஐந்திணை

தென்னந் திருவின் செழுநாட்டில்
திணையாங் காடோ ஐந்துவகை
செந்நெல் விளையும் திரு நிலமே
சிறப்பாம் மருதம் சீர்பெறுமே 82

இதுவுமது

மலையும் மலையைச் சார்ந்தநிலம்
மதிசேர் குறிஞ்சி நிலமென்பார்
அலைசேர் கடலைச் சார்ந்தநிலம்
அணிதேர் நெய்தல் ஆகுமதே 83

இதுவுமது

மல்லிகை முல்லை மணமலர்கள்
மகிழ்வை நல்கும் பொழில்முல்லை
பல்வகை நல்வினை வுளதாகிப்
பண்பொடு பயன்தரும் நாற்றிணையே 84

தென்னகத்தின் பாலை

குறிஞ்சியொடு முல்லையுமே
கொடுவேனிற் காலத்தே
திறஞ்சிதறி இலையுதிர்த்
தென்பாலைப் பெயர்பெறுமே 85

இதுவுமது

காதலது முறிதருமோர் காலத்தே இடைநிகழும்
வேதனையைப் பாலைதனின் விளைவெனவும் கூறுவரே

இதுவுமது

உள்ளத்தே தெள்ளறிவு ஊன்றி நிலையிலதாய்க்
கள்ளத்தே செலும்நிலையைக் காணுவதும்பாலையதாம்

இதுவுமது

உருவகத்தின் பாலையலால் உள்ளுருக்கும் தீம்பாலை
நெருப்பாறு முள்பருக்கை நீள்நிலமே யீண்டிலதே

முள்ளும் கனல்யாறும் மூளுந்தீக் கொடும்பாலை
எள்ளும் மணல்கற்கள் எரிபாலை யீண்டரிதே 89

கோடையின் நிலை

மழைமறந்து தழையுதிர்ந்து வெயில்முதிர்ந்து [நிழலொளிந்து
மனமுடைந்து மகளிர்தங்கள் வளமிழந்து [மலர்துறந்து
குழையநின்று பறவைதங்கள் மனையகன்று [மகளிர்தங்கும்
மனையுள்வந்து உரைகள்விண்டு மகிழநின்று [புகழுமே 90

இதுவுமது

புதரே தங்கிய விலங்குகளும்
பொந்துள் புகுந்து வாழ்வுறுமே
மதியே பொங்கிட அரவினங்கள்
மனையுள் வாழ்ந்திட பழகிடுமே 91

நாயும் பூனை மனைகாத்தே
நலமாய் வாழப் பழகினவே
மேயும்மாடு கழுதை யினம்
மிகைபணி செய்திட பழகினவே 92

கோழியும் புறவும் மனைதங்கிக்
குலவிட நன்குக் கற்றனவே
வாழையும் முல்லைக் கொடிகளுமே
மனையில் வளரக் கற்றனவே 93

குடிக்கும் நீரும் குறைவாகி
வடிகால் காய்ந்து வரண்டனவே
துடித்து சிற்றுயிர் பலவினமும்
பொடித்துப் புதைந்துப் போயினவே 94

வளத்தைக் கெடுத்தார் அரசியலார்
வனத்தை அழித்து விறகெறித்தார்
குளத்தே வரட்சி நெடிதுறவே
கனத்தே மழைகள் பொழிவிலவே 95

செயலின் வளமே சிந்திய நிலையில்
இயலின் வளமே கேடுறுமால்
பெயலின் கலையும் மகிழ்வின் விளைவும்
பெரிதும் பொருந்து மியல்பினவே 96

காதலினுளமே கலைவினதாய்க்
கடுமனமாகி நிலைமாறி
வேதனைபடவே மலை காடும்
வீடும் கடுவெயில் காய்ந்தனவே 97

பருவங்கள்

ஆறுவகைப் பருவமதில் ஐந்திணையும் மாறியதன்
பேறுவகைப் பூக்குமெழில் பீடுணர்தல் பேரறிவே

இதுவுமது

தையி லிருந்திரு திங்கள் தனித்தனி
தகைசேர் பருவப் பெயர் பூண்டு
வைய மகிழ்ந்திட நன்னிலை தந்திடல்
வள்ளலை யொத்திடு வாய்மையதே 99

சோலையின் பயன்

வாழ்வுறுமுயிர்களின் வழிபலவும்
வடிவுறநிறைபடத் தளிர்மலர்காய்
கூழ்பழம்நறுநிழல் குணமமையக்
கொடையெனத் தருவதுநாநிலமே 100

இட உரிமை

பலபல உடலுடை உயிர்வகைகள்
பண்பொழில் நிழலினில் உறவமைய
நிலையிட மெமதென மனையறமாம்
நிகரறு சோலைதன் பண்பதுவே 101

இட வளம்

பாலைநிலமே ஈண்டில்லை
பண்பார்பொழிலே ஈண்டுளதால்
பாலைக்கொடுமை பகராதே
பாங்காம் சோலையுள் நுழைவோமே 102

சோலையின் வளம்

கொத்துக் கொத்தாய் செடிவகைகள்
கோடுபருத்த மரவினங்கள்
தொத்திப் படர்ந்த கொடியினங்கள்
தூவிப் பூவைத் தொழுவதுகாண் 103

பசிய புல்லினை மிசைய மேய்தலும்
கசியு மூற்றுநீர் புசியு நீர்மையும்
விசையு ளக்கிளை மான்கள் நேர்மையாய்
திசையெ லாம்விளை யாடித்திகழுமே 104

குயிலும் குயிலும் கூவுமிசை
கிளியுங் கிளியும் உரைபொழியும்
மயிலும் மயிலும் நடனமிடும்
மகிழ்வுடை பொழில்நிறை வளநிலமே 105

கட்டுமாம் பழம் தேன்வாழை
    கனிந்த பலாவின் சுளைகளுமே
சொட்டும் தேன்துளி நறுகொய்யா
    சுவையாம் நாவல் நெல்லியுமே 106

காய்களின் இயல்பு

கொடிக்காய் நீண்டு பருப்பதுவும்
    கொடுமரக் காய்கள் சிறுப்பதுவும்
செடிக்காய் திரண்டு செழிப்பதுவும்
    சீரா மியல்பின் தேர்விதுவே 107

சாற்றின் சிறப்பு

கடிக்கக் கடிக்க இன்பூட்டும்
    கட்டுக் கரும்பு, சாறினமே
குடிக்கக் குடிக்க தெம்பூட்டும்
    குளிர்ந்த இளநீர் பதநீரே 108

வியப்பாம் விளைவு

கொம்பில் வீடு தேன்கூடு
    குடநீர் காட்டில் கோசாக்காய்
கொம்பில் கிழங்கு சப்போட்டா
    கொழுமண் ணுள்காய் கடலைக்காய் 109

தொட்டால் சுருங்கி வணங்கிக்குழையும் செடிபாரே
    விட்டால் தெளிந்து நிமிர்ந்து
        [விழையும்வகைகாணே
பட்டால் சுணங்கிக் கலங்கிவீங்கும் காஞ்சிரமே
    பட்டாக் கத்தியைப் படைக்கும்
        [மரத்தைப்பார்த்திடுவீர் 110

வியப்பாம் கொடி

தரையுள் கிழங்கு கொடிமரமேல்
தவழும் இடையே தண்டிலதாம்
விரைவில் கருடன் கிழங்கென்பார்
வாய்ப்பொடு நஞ்சினை வாட்டிடுமே 111

மலர்களின் மாட்சி

காலை மலர்ப்பூ கட்டழ குற்றே
கவினொடு காணுத லறிவீரே
காளையர் தம்மின் மேனியி லூற்ற
கலையெனத் தோணுத லறிவீரே
மாலை மலர்ப்பூ மகிழழ கின்பால்
மணமிகு நண்புற லறிவீரே
மங்கையர் மேனி மடவழ கென்று
மதிப்பார் காதல் மாமதியோர் 112

மேகமும் மழையும்

தண்பொழிலைத் தேடிவந்து தங்கிப்போம் மேகங்கள்
தவமலிய நீர்த்தேக்கம் தான்பொழியும்
[மாமழையாய்
விண்ணிலையை யூடுறுவும் விலைமதியா மாமலைகள்
விளையாட்டாய்த் தேவைகளை விளைவித்துத்
[தந்திடுமே 113

நதிகளின் பயன்

இருகரையும் பூம்பொழில்கள் இனத்தோடோங்கும்
எழிலான சோலையுளே நுழைந்துப் பாய்ந்து
மருவியநீர் தெளிந்தோடி மடைநிரப்பி
மங்காத சீர்வளர்க்கும் நதிகளீண்டு 114

காற்றின் சிறப்பு

வடதிசையின் காற்றுதனைக் கூதலென்று
வாட்டத்தால் வசைபாடும் வாய்மைமிக்கோர்
திடதென்றல் தென்திசையில் வருங்காலத்தைத்
தேடியே பொங்கலிட்டு வாழ்த்துவாரே 115

இயற்கைத் தண்ணீர் பந்தல்

சோலையில் நீருண்ணத் தேடியதோர் வீரனவன்
சொல்மறந்துத் தூங்கியதோர் தோழனிடம்
[நீரென்றான்
சோலையுள் தொங்கியதாம் தெங்கிளநீ ருண்பித்துத்
தோழனே பல்வளத்தைச் சோதிக்கில்
[பாங்கென்றான் 116

மலர்களின் வகை

கொடியுடை மலரது கொழுமண முடையது
[கொடிதலவே
கொம்புடை மலரதுதெம்புள தின்புடை
[கொம்புடைய
செடிதரு மலரது பலநிற முடையது சேடுடைய
செழுமண வெழிலது நீர்மலர் தனியொரு
நீர்மையதே 117

வியப்புடை விலங்குகள்

அம்பொடு பிறந்த முள்ளம்பன்றியை அறிவீரோ
முள்ளொடு பிறந்த மீன்தேள் எலிகளைத்
[தெரிவீரோ
கொம்புடை விலங்கு சண்டை செய்வதைக்காணீரோ
கொல்புலி பல்நகம் கோணியிருப்பது
[கூர்படையே 118

குணத்தின் பண்பு

ஊனுண்விலங்கு பாம்பினமும்
 ஒளிந்து வாழ்தல் கொலேகுணமே
ஊனுண்ணுத யானையினம்
 ஒருமித் துலவுது வெளிதனிலே 119

நண்பின் திறம்

சிட்டுக்குருவிகள் கட்டும்கூட்டெழில் சீர்காணே
முட்டைக்குவியலில் பெட்டைத்தவழ்வதின்
 [முறையோரே 120

சோலேயில் விளேயாட்டு

அங்குறை மேகங்கண்டு ஆடுதுதோகை தானே
இங்கொரு விழுதில் மந்தி எழிலூசலாடல்காணே

விலங்கின் பேரறிவு

வடிவினில் சிறுநரி மதிதனில் பெரிதென
மடியுடை சுடுகுண புலிதனே வெல்லுதே 122

மணம் சிறக்குமிடம்

வேரில் சதையில் மணஞ்சிலதில்
 வித்தில் கிழங்கில் மணஞ்சிலதில்
நாரில் மரத்தில் மணம்சிலதில்
 நறுமணம் இலேபூ தனில்சிலதே 123

மண்ணின் தனிச்சிறப்பு

இட்டபொரு ளொற்றைக் கிரண்டல
[ஏழுபங்கை யுண்டுசெய்து
திட்டமொடு தருகின்ற வட்டமது
[மாவட்டம் நாடதென்பார்
கெட்டநில மீண்டில்லை திட்டமிலார்
[பட்டழியும் தீமையின்றி
கெட்டதொரு பொருளென்று விளைவதே
[ஒன்றில்லை கேட்டீரே 124

இடுநிலத்தின் சிறப்பு

திரவிட மிதுசுடு நிலமிலை திருவள ரிடுநிலமே
தீம்பொழி லுடையது புதைபடு பிணம்நடு
[கல்லுண்டே
கரவுள சுடுதொழில் வடவரி னுடையது கருதாதே
கசடினை விடுவதி லிதுவொரு கலையென
[தெளிவீரே 125

அரிசியின் சிறப்பு

வடநிலத்துக் கோதுமைக்கு வெறுப்பைக் காட்டி
வளமனையில் சேர்க்காமல் தென்னாட்டின்பத்
திடசம்பா அரிசிதனைத் தேடிவாங்கித்
திறமையொடு சோறுக்கி நெய்யோ டுண்பார்

ஆலமர நிழலின் சிறப்பு

அழகினை விரும்பி மணம் செய்த
அன்பன் சினகுண மனைவி தனின்
அடமதில் கெடுநிலை மிகுவாகி
அடிஉதை கொடுத்தே அகற்றிவிட
முழுமன துடனழைத் தேகியொரு
முதுவிழு துடை பேராலின்கீழ்
முழுமதி நிலவிடைத் தூங்கியெழ
முகமலர்ந் திருவரும் ஒன்றுனர் 127

கட்டுக் கொடியின் சிறப்பு

கட்டுக் கடங்கா மனமுடைய
காதலர் காதலின் காதகத்தால்
கட்டுடல் கெட்டிட மனமுருக
கசந்து நோயது மிகைசெய்ய
கெட்டுத் துறந்து மனைவெறுத்துக்
கேளுறை சோலையைக் கண்டங்குக்
கட்டுக் கொடியினை உண்டிடவே
கனிவொடு தெளிவினைக் கண்டனரே 128

நொச்சியின் குணம்

தலைவலி பாரம் தாங்காமல்
தவித்திடு மொருவன் அருகிருந்த
தழைமலி நொச்சி மரகீழல்
தங்கித் தூங்கத் தலைப்பட்டான்
சிலமணிநேரம் சென்ற உடன்
செழிப்பொடு விழித்து நோய்நீங்கிச்
செழுமையின் சோலைக் காட்சிதனைச்
சிறப்பொடு பாடி ஆடினனே 129

பாத எரிச்சல் மருந்து

காலின் பாதம் எரிநோயால்
கலங்கிய பெண்மன வெறுப்புடனே
காட்டுப் பக்கம் நடந்தேகிக்
காணா தொழிவோ மென்றெண்ணிச்
சோலைப் பக்கம் செல்லுகையில்
சுடுகுணக் குரங்கிடு மலமிதித்துச்
சுகமாய் நோயும் தீர்ந்தென்னே
சோலையின் குணமெனத் திரும்பினளே 130

பெருமருந்துக் கொடியின் குணம்

பாம்பு படமெடுத்தே ஆடிவர கண்டொருவன்
பதறித் துடிதுடித்துப் பயந்துடலம் நடுநடுங்கி
வேம்பிற் படர்ந்திருந்த பெருமருந்துக்
[கொடிபிடித்தான்
வீறிட்டே ஓடுகின்ற பாம்பதனைக் கண்டிலனே

சொல்லாற்றல்

இளமைத் துடுக்கால் கணவனுரை
எதிர்த்துப் பேசிப் பகைகொண்ட
இளமை நங்கை சின்னாளில்
ஏங்கித் தவித்துக் கணவனொடு
வளமாய் வாழ ஏக்குற்று
வழியறி யாது சோலைபுக
வருவேன் நாளை என்றோர்சொல்
வந்தது வந்தான் வாழ்ந்தனரே 132

மண்ணின் வளம்

தெற்குவந்து போரிட்டோர் தேய்ந்தே போனர்
வடக்குச்சென் ஞேர்முறையாய் வென்றே வந்தார்
தெற்கு தக்கோர் வாழ்வினுக்குச் சிறந்தபூமி
வடக்குத்தான் போர்களத்தின் வாய்ப்பதாமே

வாழ்வின் சிறப்பு

வாழவெனில் தென்புலத்தே வந்துவாழு
வாதென்னில் வடக்கினுக்கே வலியப்போபோ
மேழியுழும் திருத்தொழிலோர் மேலும்வாவா
மிகுசூது வஞ்சகத்தோர் விரைந்துபோபோ 134

உயிர் அணுக்கள்

தென்புலம் உயிரணுத் தேங்கியதால்
தன்புலம் வளமிகத் தாங்கிடுமே
தென்னிலம் விளைதரும் திருவிடமே
திண்பொருள் நிறைவிடம் திரவிடமே 135

உணவின் சிறப்பு

பலனும் திறலும் பார்த்துண்ணப்
பழகிய மனையவர் நெடிதளவு
நலனும் தெளிவும் நண்பின்பும்
நடையொடு பழகிட முனைகுவரே 136

விளைபொருள் சிறப்பு

மண்ணுள் மலர்தரும் உப்புகளும்
மலிதரும் தங்கமு லோகவகை
வண்ணந் தருநிற வழகுடனே
வளமிகு மிலைபழ வகையறிவீர் 137

உண்ணலின் சிறப்பு

அளவும் வலிவும் அறுசுவையின்
அறிவுட னுண்ணும் மனைதனிலே
இளமை புலமை உரிமைகளும்
எழிலொடு திறலுற விளையாடும் 138

மலர்தலில் புதுமை

சுவைத்திட மலரும் மகிழம்பூ
நகைத்திட மலரும் முல்லைப்பூ
கவிசொல மலரும் குருக்கத்தி
காண மலருமே நோக்கலரி 139

திட்டிடப் பூத்திடும் பாதிரிப்பூ
திரும்பிடப் பூத்திடும் சண்பகப்பூ
நட்பினில் பூத்திடும் ஏழிலைப்பூ
நடித்திடப் பூக்குமே புன்னையின்பூ 140

கையும் காலும் மெய்யும் படலால்
கவினொடு மலரும் மராமரப்பூ
பையும் தைக்கப் பொலிவு தழைத்துப்
பணிவொடு மலரும் அசோகப்பூ 141

மலர்தல் புவியின் மாண்பென்றே
மதியொடு கூறினர் பலர்பலவாய்
மணமோ டிருநிலம் மகிழுறவே
மலியும் பொருளினை யறிவீரே
நலமிலை யெனிலவர் நனியலவாம்
நயமிலை யெனிலவர் நயமின்றே
நடுநிலை தெளிவது புரியாரேல்
நனியுற புரிவது இலமாமே 142

கோவில் பாடியது

கோவில் பாடியது — இது கோவில்களைப் பற்றி பாடியது என விரியும், (கோ - இல்) கோவில் ஈண்டு, கோ - அரசன், இல் - மனை. அரசன் மனை - அரசன் தங்கும் அரண்மனைகளை உணர்த்தும் செய்யுட் பகுதி என்பது பொருளாம்.

பண்டைக் காலத்திலேயே தென்னகத்தில் நுணுகிய கலை அறிஞர்கள் பலர் நிரம்பி இருந்தனராதலால் திராவிடத் தலைமை நிலையங்களை, மரங்கள் நிறைந்த சோலைகளும், அகழிகளும், மதில்களும், கோட்டைகளும், சுரங்கங்களும், அடுக்கறைகளும் — குளித்தலறை, உடுத்தலறை, உணவறை, ஓய்வறை, ஆய்வறை, படுக்கையறை போன்ற பல அமைப்புகளும் பொருந்த அமைத்து சிறப்புடன் ஆண்டுள்ளார்கள். அவ்வாட்சி நிலையங்களுக்குக் **கோவில்கள்** என்றே பெயர் வழங்கிற்று.

தூய அருளுடையவர்கள் அறிவு தங்கும் உடலையே கோவிலென்றும் கூறினர்.

இடைக்காலத்தில் அயலவர்கள் தென்னாட்டுள் நுழைந்து வாழ்க்கை அமைத்து நாளாவட்டத்தில் அரசியலாட்சியை அழித்துவிட்டு சமயக்கோவில்களைப் பெருக்கிவிட்டனர்.

இறைமையை உருவாக்கி, ஆயுதங்களைத் தாங்கிய வீரனாக்கி விட்டனர். கோவில்களைக் கொலைக்கள மாக்கிவிட்டனர். இம் மாறுபாடுகளை நீக்கப் போரணி பூண்ட மனைகளைப் பாடியிருத்தலைக் காண்க.

கோவில் பாடியது

வலிமை நிலையங்கள்

உருவுடை பொருளாய் உடலுடை திறனுய்
உடைபடு நெறியாய் உலகினதாய்
பெருகிடு நிலையாய் வலிவுடை முறையாய்
பெரிதுடை முடிவின தெழில்கோவில் 143

இதுவுமது

அறிஞரொடு குலவிபல அரியசெய லுணரவகை
அணிதிகழ நிலவுவது கோவிலதாம்
புறையகல பகையகல புகழுயர வளமமைய
புதுமைசெயல் தனையறிதல் கோவிலதாம் 144

இதுவுமது

அருளது தவமுறை பெறுதவ மமைவுற
அரியன பயனுற அமைநேய
திருவிடை பொலிதர திறமையு முனமெழ
திகழிரு தயமது தவகோவில் 145

இதுவுமது

படையின் பொறிகள் பலதிகழ
படையணி யணியென பணிபுரிய
கொடையின் பயனது வளமுயர
குலவிடு நிலையது தென்கோவில் 146

இதுவுமது

திண்புல னரணிடை திகழுவது
பண்படு முடிவினை யுடையதது
கண்ணிடை மணியென கமழுவது
எண்ணில தருவது கோவிலதாம் 147

இறைமை ஆற்றல் தங்குமிடம்

அழகிய அரண்மனை தென்கோவில்
அணிதிகழ் தொழில்மனை தென்கோவில்
பழகிய கடிமனை தென்கோவில்
பயன்தெளி இதயமும் தென்கோவில் 148

இதுவுமது

கற்பனைக் கலைகள் தென்கோவில்
கண்ணிய கழகம் தென்கோவில்
சிற்ப நிலைகளே தென்கோவ்ல்
சித்திரக் கலைகள் தென்கோவில் 149

இதுவுமது

ஆய்வுக் கூடம் தென்கோவில்
அறிவு நிலையமே தென்கோவில்
தூய்மை நினைவுகள் தென்கோவில்
தூய உள்ளமும் தென்கோவில் 150

தவம்

அறிவுடை இதயம் தென்கோவில்
அறநெறி சொற்கள் இறைமைநிலை
திறமுள கவிநயம் அருள்நிலைகள்
தெளிதரும் உரைகள் தவநிலையே 151

முத்தமிழ் சங்கம் யாவையுமே
மூதறி வூட்டிடும் தென்கோவில்
இத்தரை யாண்டிடும் பேரவைகள்
எழிலே தங்கும் தென்கோவில் 152

உண்மை யறிவே வழிபடுதல்
உள்ளத் துயிரே இறைமையதாம்
திண்மை வீடே முடிவுநிலை
தெய்வம் என்பது திருவருளே 153

வழிபாடு

உள்ளப் பணிவே தொழுகைமுறை
ஊக்கப் பணியே வழிபடுதல்
தெள்ளத் தெளிவே இனிமைநிலை
தேர்ந்தோ ரெல்லாம் இறைமைகளே 154

அருள்

அருளொடு நின்றே மனிதரென
அறிவுடை யோராய் ஆய்ந்திடுவார்
திருவுடை நிலனும் திரவிடமே
சிறக்க நின்றே வாழ்ந்ததுவே 155

ஆட்சி

நண்பில் சிறந்தது தென்னாட்சி
நலத்தில் தெளிந்தது தென்னிறைமை
பண்பில் வாழ்வது தென்குணமே
பரமாய் காண்பது திரவிடமே 156

இனியவை

கல்வி நிலையமே இறைமைநிலை
கலைகளின் விளைவே தலைமையது
செல்வ முறைவிடம் நிறைமையிடம்
செந்தமிழ் வளமே இனியநிலை 157

அன்றைய சிறப்பு

மழையும் பொழிந்து வளமும் சிறந்து
பொருள்கள் மலிந்து பொலிதரவே
இழையும் கலந்து நிலையும் சுரந்து
வயதும் நிறைந்து வாழ்ந்தனரே 158

இடைக்காலத்து சிலைக் கோயிலின் நிலை

அயலவர் போருக் கெனுமுறையேயுற்
றடிவிழு முனமுற இடமதுவாய்
அயலவர் வாழ கடிமனை யாக
அமைத்தது கடவுளின் கோவில்கள் 159

இதுவுமது

ஆரிய போர்களின் அடிப்படை வலிமை
ஆலயம் சமைப்பதி லறிந்திடலாம்
வீரிய கூர்வேல் சூலமும் ஆழியும்
வேள்வியின் குண்டம் கொலைவினையே 160

வட கோயிலின் நிலை

கோயில்தனின் காவலர்கள் கூளிபேய் பூதமொடு
கொள்ளிவாய்ப் பேயென்று கூறிடுதல் காண்பீரே
வாயிலிலே கருங்கூழை வாழைமா கட்டிடுமாம்
வடகாளிக் கோயில்நிலை வார்கலிங்கப்
[போர்பாடும் 161

வகுப்புக் கோயில்கள்

சாதிப் பெயர்களில் நீதிப் பெயர்களில்
சமயப் பெயர்களில் கோயில்கள்
வீதிக் கொருவகை சூதுக் கொருவகை
வீண்செல வைச்செயத் திருநாட்கள் 162

போர்க்கோலம்

மனிதரின் உருவினில் கடவுளர் பெயர்களும்
மாடரி பறவைகள் வாகனமும்
முனைதரு போர்நெறி கருவிகள் அரவணி
மோதுரு கடவுளின் உருதனிலே 163

வகுப்புப்போர்

சாதி மதமெனும் போரெங்கும்
சமய சடங்கினில் போரெங்கும்
நீதி நிலைதனில் போரெங்கும்
நிலைதவ றியஇறை போரெங்கும் 164

சமயப்போர்

நாட்டினை ஆண்டிடப் போராட்டம்
நன்மை எதுவெனும் போராட்டம்
வாட்டம் தவிர்த்திடப் போராட்டம்
வழிவழி கடவுளின் வழிபாட்டில் 165

போர்த்தெய்வம்

போர்வட தெய்வம் நிணமுண்டு
பொங்கி யெழுந்து மதுவுண்டு
சூர்கொடு தலையும் சதைகளையும்
சுமர்ந்து குருதி உண்டிடுமே 166

தென்னகத்தின் இறைமை

தென்னின் கடவுள் தின்னுது
திருவருள் நிலையாய் ஒளியூட்டும்
தென்னின் கடவுள் உருவின்ரும்
தெளிந்தோ ருள்ளம் தங்கிடுமே 167

வடமுறை நிலவியது

கண்ட இடமெலாம் கோயில்கள்
கண்ட வடிவினில் கடவுள்கள்
கண்டதை உண்டிட பூசனைகள்
கற்பித் திடுவது வடமுறையே 168

எழுச்சி பாடியது

எழுச்சி பாடியது — இது எழுச்சியின் தன்மையைப் பாடியது என விரியும். (எழுச்சி—எழுதல், வளர்தல்) வீரத்தின் பேராற்றல் உடலுள் நிறைந்து திடீரென எழும்தன்மை உடையதாகும். இவ்வாற்றல் நினைத்த போதெல்லாம் தோன்றுவதில்லை. தோன்றிடிலோ பின் வாங்குவதுமில்லை. அத்துணைச் சிறப்புமிக்க எழுச்சி போர்வீரனுக்கு மட்டும் சொந்தமன்று, எத்தகைச் செயல்புரிவோருக்கும் **எழுச்சியிற்** பங்குண்டு.

எழுச்சியிற் கூறும் விளக்கம் இன்பம்தரும்
எழுச்சியின் கொடை குணம் இணையற்றது
எழுச்சியிலெழுந்த போர் இமயத்தை வென்றது
எழுச்சியின் கவிகள் என்றும் நிலைப்பன

ஈண்டு போர்வீரர்களின் எழுச்சி முதலியன காண்க.

ஆற்றலின் வலிமை

எழுச்சி வலியது நிகரிலதாம்
ஏக்கம் அனைத்தும் எழும்புவது
எழுச்சி பெரிதுறில் எதிரின்றி
எதையும் தகர்த்து வென்றிடுமே 169

இதுவுமது

குற்றங் கண்டால் எழுச்சி எழும்
குறைகள் குன்றில் எழுச்சி விழும்
குற்ற மெழுச்சியைத் தூண்டிவிடும்
குறைவுகள் தேய்வுறத் தேவையிதே 170

ஆற்றலின் முதிர்ச்சி

போருக்கென வீரத்தினை ஊறச்செயும் தோள்வலிமை
நேருக் குயிரே யற்றிட சீறிச் செலும் கையுரிமை

இதுவுமது

கொடுமைக் கண்ணில் எரிவீசும்
கூரிய நோக்கில் வேல்வீசும்
கடுமைப் பார்வை நஞ்சூட்டும்
கண்ணின் கொடுமை தாங்கிலரே 172

இதுவுமது

கச்சைக் கட்டித் தோள்வடம் சுற்றிக்
கவசத் தினையே இனிதாக
மெச்சித் தட்டித் தீய வடக்கினை
வென்றனர் அன்றுள வீரர்களே 173

ஆற்றலின் புதுமை

புலியும் சிங்கம் பாம்பெல்லாம்
புதுமை கற்றுத் தெளிவுறுமே
வலிவும் திறலும் தான்தானுய்
வளரப் பிறரைத் தாக்குவரே 174

இதுவுமது

இடித்தால் எட்டாள் வீழுவரே
பிடித்தால் பத்தாள் பிடிபடுவர்
கடித்தே செட்டாய் வீழ்த்துவரே
கொடுப்பா ரடிவுதை குறைவின்றி 175

மீறிய எழுச்சி

பல்கடித்துக் கண்சிவந்துப் படபடவென்
றுதடதிரத் தோள்கள் விம்ம
வல்துடிப்பு மீமிசையே வடிவெடுத்த
நாகமென வரிந்து நிற்பர் 176

இதுவுமது

எட்டிக் குதித்தே எழுந்தோடும்
எவரும் பிடித்திட முடியாது
தட்டிப் பலரைச் சாய்த்துவிடும்
தனித்தே அடங்காச் சீற்றமிதே 177

உளமுப்பி நிலைதப்பி சிலை யொத்து மிகுவீர
வளமுற்று தலைதப்ப மலை யொத்த உருவாவார்

எழுச்சி வெறி

அடக்கிட முடியா திறற்கடு நடையார்
பிடித்திட முடியா கடித்துமிழ் நிலையே 179

இதுவுமது

வீரம் நிறைந்தே ததும்புவதால்
விளையும் எழுச்சி பலவகையாம்
வீரம் ததும்பி வழிந்திடலால்
வெறியாய் மீறி விளையாடும் 180

போர் வீரம்

போரின் எழுச்சி வலிமை கொடு
பொங்கிச் சீற்ற மிகவுறலால்
பாரின் மக்கள் தாங்கிலராய்ப்
பயந்தே ஓடுவர் கண்டிடிலோ 181

வெறியின் திறல்

கோரப் புறவெளித் தோற்றமொடு
குவியாப் பணியாத் திறனமையத்
தீரப் படையுடை உருவினொடு
திகழும் நிறைவலி அறிவீரே 182

வடவர் கூற்று

எழுச்சியை வடவர் காளியென்பர்
ஏதும் செய்யும் கூளியென்பர்
இளர்ச்சியைத் தடுக்கும் தேவியென்பர்
கிடைத்ததை உயிர்பலி கொடுத்திடுவர்

எழுச்சியின் வேகம்

நண்பும் பொறையும் நில்லாது
நாணய முறைகளும் வெல்லாது
கண்முன் வெல்லும் காட்சியிதே
கருதும் பொருதும் உறுதியொடே 184

எழுச்சியில் அறிவு

புலமை உடையோர் எழுச்சியுறின்
புதுமைக் கவிதைகள் புனைந்திடுவர்
நிலமீ தரசினுக் கெழுச்சிவரின்
நிகரிலை யெனசெயல் நீடுறுமே 185

இதுவுமது

அறிவுடை யோருக் கெழுச்சிவரின்
அருள்பெரு முறைபல அருளுவரே
திறலுடை யவர்தமக் கெழுச்சிவரின்
தெளிவொடு பகைபல தீர்ந்திடுமே 186

எழுச்சியில் கொடை

கொடைகுண முடையவர்க் கெழுச்சிவரின்
குறைவுள செயல்பல நிறைவுறுமே
படையுள மறவருக் கெழுச்சிவரின்
பகையது கெடசெய லவர்கடனும் 187

எழுச்சியில் மடமை

மடமை உடையவர்க் கெழுச்சிவரின்
மடிமை மலிவுற நலிவடைவர்
கடமை தவறிடு செயல்புரிவர்
கயமையைப் புகழெனத் தெளிகுவரே 188

பேய்க் குணத்தைப் பாடியது.

பேய்க்குணம் — மாறுபட்ட குணம். மாறுபட்ட குணத்தின் தன்மையைப் பாடிய பாடல்களின் பகுதி என்பது இதன் பொருளாம். குணம் மாறுபட்டு கைக்கும் சுரைக்காயைப் பேய்ச் சுரைக்காயென்றும், உவர்க்கும் கரும்பைப் பேய்க்கரும்பென்றும், மிஞ்சிய காற்றைப் பேய்க்காற்றென்றும் கூறுவதுபோல் ஈண்டு எழுச்சி வீறுகொண்ட குணத்தைப் **பேய்க்குணம்** என்று சிறப்பித்துப் பாடியுள்ளது.

போர்வீரர்கள் எழுச்சியின் ஆற்றலைப் பயன் படுத்தி போரில் வீரச் செறிவின் வெறியால், ஈவு இரக்கம் பாராமல் எதிரிகளைக் கொன்று வெற்றி சூடலால், திராவிட அரசர்களின் ஆட்சி சிறந்திருந்தது. போருக்குச் செல்லும் வீரப்படை, தாளத் திற்கொத்து மேளத்திற்கு இசைந்து துணங்கை ஆடிச் செல்லுதல் முதலியன விளக்கியிருத்தல் காண்க.

பேய்நிலை

சிதறுகின்ற குணமுடையோர் சீற்றம்கொண்டால்
சிந்தனைக்கே இடமின்றி சீறிவீழ்வார்
பதறிநின்று படபடத்து மூர்க்கங்கொண்டு
பலர்பகைக்கத் துணிவுடனே படைமேற்
[கொள்வார் 189

இதுவுமது

பேயிது வாமென கூறிடு வார்பகை
பேசிடல் கூசுதல் காண்கிலரே
தூயதி லேவுற வாடிட கூசுவர்
தூண்டிடு போர்செய சூழுவரே 190

பேய்க் குணம்

நாய்க்குண் டென்றும் பேய்க்குணமே
நரிதான் வெறிகொண் டமர்செயுமே
காய்க்குண் டென்றும் பேய்க்குணமே
கடும்போர்க் குணமே கண்டிடுமே 191

நன்மையும் தீமையும்

தீங்கினைச் செய்தலும் பேய்க்குணமே
திறமையைக் காண்பதும் அதுவேயாம்
பாங்கினைத் தாங்கலும் பேய்க்குணமே
படிதனை ஆள்வதும் அதுவேயாம் 192

வீரச்செயல்

மீறிய செயல்செயும் தலைவரிடம்
மிஞ்சிடு பேய்க்குணம் மேவிடுமே
சீறிய முனிவர்கள் தவமுடையோர்
செய்திடும் சிந்தனை மீறியதே 193

இதுவுமது

மிஞ்சிடும் அறிஞரின் பேய்க்குணமே
மேன்மை தவமும் வெற்றிகளாம்
துஞ்சிடு மடிசெயும் வெறிகுணமே
தூங்கா தேங்கித் தவித்திடுமே 194

புரியா நிலை

பேயென தனியொரு வடிவிலதே
பேசிப் பயனிலை செயல்கெடுமே
தூயதாம் மதிதனைச் சூழ்ந்திடலோ
துயரம் யாவும் தொடராதே 195

கட்டித் திட்டிக் குட்டிடினும் களிநடமாடும்
எட்டித் தட்டிச் சட்டெனவே இணைதடுமாறும்
முட்டிப் பூட்டிச் சேர்த்திடினும் முறைதவருகும்
தட்டித் தட்டித் திட்டினிதே தனிவழிநாடும்

இதுவுமது

கண்டதுவை உண்டிடவே கடுமிடுகா டினிலுறையும்
தண்டினிலே முண்டமதைத் தொங்கிட
[சுமந்திடுமே
சண்டைதனைக் கண்டிடிலோ தொண்டெனவே
[பூண்டிடுமே
பண்டுளதோர் மண்டையினைக் குண்டிகையாய்க்
[கொண்டிடுமே 197

இதுவுமது

போருக்கென்றே சுற்றிச்சுற்றிப்
பொய்யைப்பேசிப் புலம்பிடுமே
நேருக்கொன்றாய்த் தூரத்தொன்றாய்
நேராச்செயலைச் செய்திடுமே
யாருக்கென்றே தோணுமொழியை
யாரோசிலரிடம் பலபேசும்
பாருக்குள்ளே போரைத் தூண்டிப்
பழியைவாங்கப் பறந்திடுமே 198

இதுவுமது

கோறமிகு வீரமுடை சூரிகிற காளியென
கூவியலை வாரிடரை கோரிபல காலையுமே
மீறவழி தேறியல மோதிதலை மீதிலடி
மேலுமுற சூரிதனில் கீரியுட னேடுவரே 199

வெறிகுண விழா

கோழி ஆடு பன்றிதனைக்
கொன்று குருதி ஊனுண்பர்
மூழி கூளி என்றுருவை
முன்னே வைத்துப் பாடிடுவர் 200

இதுவுமது

உடுக்கை பம்பை சத்தத்தின்
ஒலியால் வெறிநட மாடிடுமே
படுக்கை யறியா தெங்கெங்கும்
பயமே காணு தலைகுவரே 201

இதுவுமது

நெருப்புச் சொல்லினைக் கக்கிடுவார்
நெருப்புச் சட்டியொ டாடிடுவார்
நெருப்புக் கண்களில் நோக்கிடுவார்
நெருப்பின் மீதும் ஓடிடுவார் 202

இதுவுமது

பொரு முகத்து வெறி
குணமுறத் துணங்கை யாடிடுவார்
செரு முகத் தமரில்
கொலைசெயத் துணிவர் சிற்றமொடே 203

வெறிப் போக்கு

நாற்றப் பற்களை மென்றேங்கும்
கூற்றுச் சொற்களை நின்றேசும்
மாற்றுக் கற்களை மேல்வீசும்
சாற்றப் பெற்றதை சார்ந்திலரே 204

வெறிப் பசி

வீங்கும்பசிஉடல் காந்தும்படிவயி றெறிதருமே
தூங்கும்பலஉயிர் வாங்கும்படிவடி வாயெழுமே 205

வஞ்சக வெறி

சூதால் தேரிய குணமிதுவே
சுற்றிச் சுற்றித் திரிதருமே
வாதால் வடுகுண வடிவுடனே
வகுப்புச் சண்டையை வளர்த்திடுமே 206

இதுவுமது

தென்னாட்டுப் பேய் காணேமே
வடநாட்டுப் பேய் தானுமே
தென்னாட்டுள்ளே பசி கண்டு
வடநா டோடிப் போயினவே 207

வெறி வடிவம்

வீரக் கலையொடு கோரத் துருவொடு
சூலக் கரமொடு தீகக் கியவிழி
சூரத் திலகிடு காளிக் குயிர்பலி
தேடித் தருவது மாதக் கணமல 208

வெறி செயல்கள்

உண்டு களிப்பதில் பேய்க்குணமே
உறங்கி விழிப்பதில் பேய்க்குணமே
கண்டு திகைப்பதில் பேய்க்குணமே
காதக மாவது வெறிகுணமே 209

வெறிகுண வேகம்

தன்னின் புகழுக் கொருவழி யறியா
தயையே புரியா தவமறியா
பின்னை யறியா வெறுமன துடனே
பிழையே செய்திட முந்திடுமே 210

இதுவுமது

குரங்கு புலிபாம் பினதியல்பே
கொடியதென கூறும் செயலினொடு
பரந்த நிலமேல் கரந்து றையும்
பயமுள வெறிகுணம் பேய்க்குணமே 211

இதுவுமது

நாட்டறி வில்லான் நாநயமில்லான்
நண்பறி வில்லான் நடையறியான்
கூட்டறி வில்லான் குலவிடநில்லான்
கொடைகுண மில்லான் வெறிகுணமே 212

வெறிகுண செயல்

உண்டு களிக்கான் வெறிசெயலன்
ஓடி சலிக்கான் வெறிநடையன்
தண்டு முண்டுசெயல் வெறிமொழியன்
தணிந்து வாழான் பகைமொழிவான் 213

கற்பனைப் பேய்

பேயென் றோருரு பேதமையாம்
புரட்டு மொழியை மிகமூட்டி
பேயென் றிரவினில் உருமாறிப்
பொருள்தனைக் கவர்ந்தள தறிவீரே 214

பிறப்பு நிலையைப் பாடியது.

பிறப்பு நிலை—இது அரசாளத் தோன்றிய தலைவர்களின் நிலையை உணர்த்தும் மரபு மொழியாம்.

தமிழ்ப் பிறப்பு—தமிழர் பிறப்பு—அரசாண்ட தலைவர்களின் பிறப்பு—அரசியல் தொண்டர்களின் பிறப்பு—முதலிய வற்றொடு ஊர்வலக் காட்சிகளையும் மாணவர்கள் கேட்டு பெருமகிழ் வெய்தியது ஈண்டு கூறப்படுகிறது.

பிறப் பெழில்

திருநிலமாகி திருவிடமாகி திராவிடமான தென்னாட்டில்
திருமுறையான செழுமதிதோன்றி செழுமர
சாகியதறிவீரே 215

தமிழ்ப் பிறப்பு

அசைவது தோன்றி அதனிடை யொலியெழ
அணிகளு முறைமுறை தவழ்தரவே
இசைநிறை கலனொடு இறைநிலை பிணைதர
இயல்வது தமிழென தோன்றியதே 216

இதுவுமது

தமிழ்தனை மொழிதரும் திரவிட நிலமது
தகுதியில் பெருநிலை தனையணியும்
தமரென வளருனர் நமரென குலவுனர்
தயைமிகு தமிழர்கள் தோன்றினரே 217

திராவிடத் தொண்டு

திராவிடத்து முறைபோக்கி மாறுபடும்
ஆரியத்து மறையாக்கி சூதுபெற
திராவிடத்தில் கதைகோத்த காலமதில்
சங்கமன் சோமுகன் தோன்றினரே 218

பண்டைய திராவிட ஆட்சி

தரணி தன்னிலே தமிழரசாண்டு
தனிப்புகழ் கொண்ட கொடையினராம்
இரணியாக்கதன் இரணியன் இராவணன்
எழில்மா வலியும் தோன்றினரே 219

சேரர் ஆட்சி

அரசுக் கயல்முறை விதியைச் சூடிட
அணுகுறு சமயத் தறிவுடனே
முரசுச் சேரன் செங்குட் டுவனும்
முனைந்தா ரியம்கெடத் தோன்றினரே 220

இதுவுமது

திராவிட நாடொரு தனி நாடே
திராவிட அரசியல் தனியரசே
திராவிட நிலைதனை இழிவின தாய்ச்
சாற்றிடு வடவர் துணிபெதுவோ

திராவிட மதைபிறர் குறை சொலலால்
திராவிட மொழிதனி விமயத்தே
திடமொழி பொறித்து நெறி நின்றுன்
தேரிம வரம்பன் தெளிவுடனே 221

சோழர் ஆட்சி

தக்கணத் திலுள மக்கள்தம் மடிமை
தன்னை நீக்கி அரசாள
தக்கணத் தினிலே மெய்க்கரி காலனும்
தன்மா னத்தொடு தோன்றினனே 222

இதுவுமது

தென்னவர் வீரர்க ளென்றாட்ட
தென்னின் சோழன் வட.சென்றே
பின்னவர் தேர்ந்திட கங்கைதனைப்
பேணிக் கொணர்ந்தவன் தோன்றினனே 223

இதுவுமது

வடதிசை கலிங்கப் போர்வென்றான்
வயிரா கரத்தைத் தானெரித்தான்
திடமெனும் சக்கர கோட்டமதைத்
தீய்த்தகு லோத்துங்கன் தோன்றினனே 224

பாண்டியர் ஆட்சி

வடவரி னடமே முறிபட படையுடன்
வடமலை தனையே அடுத்தன்னாள்
நெடுவட விடரே பொடிபட மதுரை
நெடுஞ் செழியனும் தோன்றினனே 225

வடநாகரீகத்தைத் துரத்திய வீரமங்கை

யாகஞ் செய்தே நம்நாட்டை
அழிக்க வந்த பிறகுழுவை
போகச் செய்தே தொண்டுசெய
புனிதத் தாடகை தோன்றினளே 226

அறிஞர் ஆட்சி

தொண்டைநன் னாட்டில் மாங்காட் டரசர்
தொல்லவை அமைச்சாய்த் தொண்டாற்றி
தண்டமிழ்க் கலையால் ஆரிய பகையைத்
தாக்கிக் கைத்தளை சிறையேற்று
பண்டைநம் ஆட்சிப் பண்பதைக் காக்கப்
பணிதிருக் குறளெனும் படைதந்த
பண்புள வீரர் திருவள் ளுவரும்
பாங்குறத் தென்னகம் தோன்றினரே

இதுவுமது

பல்லா வரத்தின் மறைமலை அடிகள்
பன்மொழிப் புலமைத் தமிழரசர்
பொல்லா இந்தி வடவரின் தொடர்பைப்
போக்கிடத் தோன்றினர் வீரமொடு 228

இதுவுமது

வேங்கடனும் வரத ராசலுவும்
விரைவொடு பணிசெயும் பெரியாரும்
தீந்தமிழ் நடையுடை திரு வி க
திறலுடை அண்ணா தோன்றினரே 229

ஊர்வலம்

தேர்கரி பரியொடு நடைபடையும்
தீரமொ டணியணி யெனவருகை
நீர்கட லலையது வகைவகையாய்
நெடுவழி வருவது நிகருறுமே 230

தோரணம்

ஓலை பாளை இலைகளினால்
உயர்ந்த தோரணம் அழகுசெய
வாழை கமுகு கரும்பினமும்
வழிதொறும் நிறைவுறக் கட்டினரே 231

மேள வகை

வெற்றி முரசொடு உடுக்கை உறுமியும்
வீர பம்பையும் முழவு தாளமும்
பேரி தாரையும் முருடு மத்தளம்
நாக சுரமது நாத ஒலியுற
கொற்ற குடையொடு வெற்றி கரியுற
கூட்டு மூர்வலம் நாட்டின் பெருவழி
கோனின் செல்லுகை கூர்ந்து நோக்கிடில்
கொடை சிறப்பினின் கொள்கை காணுமே

கொடிகள்

அகிலம் தெரிதரு முயரமதில்
அறிஞர் தெளிதரு நிலையதனில்
இகபண் பமைதரு மசைவினெடு
இணையொன் றிலையெனும் தமிழ்க்கொடியே

இதுவுமது

மீன்புலி வில்லாம் முக்கொடியும்
மேலாந் திரமும் கன்னடமும்
வான்கொளும் கேரள கொடிகளுமே
வன்மை மிகவே வளர்ந்தனவே 234

தலைவர்கள்

அரசர்கள் மணிமுடி மன்னர்களும்
ஆளும் குடிதலை வேந்தர்களும்
வரிசை முறையொடு தென்னிலமே
வாய்மை பெருகிட வலம்வந்தார் 235

புலவர்

புத்தம் புதிய முத்துகளால்
புதுமை செய்த சிவிகைதனில்
சித்துப் புலவர் செல்லுவது
சிறப்பிற் சிறப்பைத் தருவதுவாம் 236

மங்கையர்

கொடியிடை யனையார் முடிசடை யுடையார்
குலவிடு பணிபல உடையவராய்ப்
பிடிநடை யுடனே மடமயி லனையார்
வடிவொடு கொடியுடன் நடந்தனரே 237

குடைகள்

வட்டப் பூச்சக் கரகுடைகள்
வரிசை வரிசை வருகுவது
வட்டப் பூக்கள் தெண்டிறையில்
வனைவது போலாம் வழிநெடுக 238

ஆலத்தி

கேரளப் பெண்கள் கன்னட இசையில்
ஆந்திர வீர நடையுடனே
பேரிளந் தமிழில் வாழ்த்துரை கூறி
பெரிதுற ஆலத்தி காட்டினரே 239

மலர் தூவல்

செந்தமிழ்ப் பெண்கள் கேரள நடையில்
கன்னட மொழியால் ஆந்திரர்போல்
வந்தினி துடனே மலர்களை வாரி
வீசிடு காட்சிகள் மிகவினிதே 240

ஒளி காட்டல்

ஆந்திரப் பெண்கள் கன்னட மொழியில்
அழகுறு கேரள உடையுடனே
தீந்தமிழ் நடையில் சேர்ந்தொரு முகமாய்த்
திருவிளக் காலத்தி காட்டினரே 241

கன்னடப் பெண்கள் கேரள மொழியில்
கனிவுறு தமிழுடை தான்பொலிய
நன்னடை ஆந்திரப் பெண்களின் எழிலாய்
நலங்கிடு காட்சிகள் நனியழகே 242

ஊரார் பேச்சு

நேரில் நின்று போர்செய்யும்
நிகரறு மன்னன் இரணியனின்
போரின் வன்மை கூறிடவே
போதா நேரம் புரிவீரே 243

இதுவுமது

பெருநில மன்னன் சூர்பதுமன்
பேரற சாட்சியின் திறலதுதான்
திருநில மொன்றே பிறவெங்கும்
செழுமைக ளோங்கிட ஆண்டனரே 244

ஊரார் உரையாடல்

இலங்கை வீரனின் அரசாட்சி
எழிலுடை யறமது நடுநிலையாய்
இலங்கக் கண்டது போல்வேறே
எங்கும் காணேன் என்றனரே 245

குற்றம் நீக்கல்

கடவுளும் பிறந்து மனைதனில் வளர்ந்து
கயமையில் கனிந்து மடியெனவே
இடரது புரிந்து வளமது துகர்ந்த
இழிசெயல் முனிந்து தெளிகுவரே 246

இறைமையிற் பழுது

மக்கள் பிறந்து மாண்பென தோன்றிய
மகிதல மதனில் இறையவர்கள்
தக்கது மறந்து சிக்கலில் நுழைந்து
தவறுதல் புரிவதை சொலவரிதே 247

மனையற மாண்பு

தமிழுக் குயிர்தரும் தனிமை முனிகுலம்
தகுதித் தருவது தவமுறையே
தமிழுக் கிழிவுற மனையின் தனியறம்
தவறத் துணியலர் திரவிடரே 248

இதுவுமது

தமிழறி வுடையவர் நிறைநல ஞெளிர்பவர்
தகுபய னடைகுவர் தயையூர்ந்தே
தமிழெழி லுடையவர் பொறைநல னணிகுவர்
தவலறு நெறிபெறும் முறையினரே 249

ஆட்சி மரபினைப் பாடியது.

ஆட்சி மரபு — இது அரசர்களின் ஆட்சி மரபினைப் பாடியது என விரியும். மரபு — பழமையிலிருந்து தொடர்ந்து வரும் முறைமை.

தென்னகத்தில் ஆண்டுவந்த அரசர்களின் வரலாற்றினை உணர்த்தும் செய்யுட்களின் பகுதி என்பது இதன் பொருளாம்.

திராவிட முனிவர் மாணவர்களுக்குக் கூறுவதாக அரசர் பரம்பரையைப் பாடியுள்ளதை அறிக.

இயற்கை ஆட்சி

விண்ணும் காற்றும் தோன்றியகால்
வெந்தழல் தண்ணீர் தோன்றியதாம்
மண்ணும் பயிரும் மரங்களெலாம்
மாண்பாய்த் தோன்றிய திருவிடமே 250

இதுவுமது

விண்ணிலிருந் தொலி காற்றி லுணர்வொலி
வெம்மையி லொலியுணர் வொளியுடனே
தண்மையி லொலியுணர் வொளிசுவை கமழ
தரையொலி யுணர்வொளி சுவைமணமாம்

ஆட்சியின் பிறப்பு

உயிர்பல தோன்றி வளமுறும் நாளில்
உலகம தாகிய பொழுதினிலே
வெயில்தரு கதிரோன் விளைவுறு மதியும்
வெந்தழல் மூன்றால் வேந்தானார் 252

ஆட்சியின் சிறப்பு

இயல்பே அரசியல் முறையாகி
இடையிடை வளமார் எழில்தேங்கி
செயல்கள் வலிவுடைத் தெளிவினதாய்த்
தென்னல வாழ்வுகள் சிறந்தனவே 253

நாட்டுக் கொருபெயர் திராவிடமாம்
நம்மின் மொழிபெயர் செந்தமிழாம்
வீட்டுக் கொருகுடி வாழ்வினராய்
வேந்தென வாழ்ந்தனர் விளைவினராய் 254

தென்னிலம் விரிந்த பெருநாடு
தேயம் போற்றிடு மொருநாடு
எந்நிலம் வணங்கும் திருநாடு
ஈண்டுறை திராவிட நாடினிதே 255

இயற்கை வழியில் ஆட்சிபெயர்

சூரிய குலமும் சந்திர குலமும்
சூடுறு தழலொரு குலமெனவே
நேரிய வழியில் நீடுறு வேந்தாம்
நெறிமுறை யொடுபலர் ஆண்டனரே 256

இதுவுமது

சோழர் பரம்பரை சூரிய குலமென
செப்பிடு முறைமை அறிவீரே
சூழும் பாண்டியர் சந்திர குலமும்
சேரர்கள் ஒளிகுலச் சீரியரே 257

ஆட்சி முறைமை

இப்பெறு முறைமை எழிலுடை தமிழர்
இமயங் கண்டார் ஆட்சியினுல்
முப்புர மெனவே செப்பிடு படையால்
முறையொடு தென்னகங் காத்தனரே 258

சூர குலமெனும் இரணியன் இராவணன்
சூரப துமனும் தாருகனும்
தீர திர்விட திறமையை காத்தது
தெளிவுடை தமிழ்மொழி வழிமுறையே 259

அரச மரபு

சேரர் சோழர் பாண்டிய ராண்ட
செழுமைகள் நாட்டின் சீர்மைகளே
கேரள கன்னட ஆந்திர ஆட்சியின்
கீர்த்திகள் திராவிட வரலாறே 260

பல்லவர் ஆட்சிக் காலமதில்
பற்பல சிற்பக் கலைகளெலாம்
நல்லன வாக்கி நிலையுளதாய்
நாட்டிய பலிபுரம் திருவீடமே 261

வள்ளல்கள் ஆட்சி

கொல்லியை ஆண்ட வல்வில் ஓரியைக் காணீரே
அவ்வையை காத்த அதிக மானினை அறிவீரே
செல்வ மோங்கிய குமணன் ஆட்சியின் சீரோரே
சீல மூறிய பாரியின் ஆட்சிகள் தென்னரசே

அரண்மனைக் காட்சி

தஞ்சை அரண்மனை காணீரே
மதுரை அரண்மனை காணீரே
செஞ்சியும் வேலூர் சேரலமும்
சேலமும் கோவையும் கோட்டைவளம் 263

இதுவுமது

புதிய கோட்டைகள் பழைய கோட்டைகள்
புதுமை செய்வதைக் காணீரே
மதியை ஊட்டிடும் அரணுள கோட்டையுள்
மாண்பொடு மன்னர்கள் ஆண்டனரே 264

பற்பல ஊர்களின் கோட்டைகளும்
பற்பல ஊரரண் அகழிகளும்
பற்பல பாழ்பட் டிருப்பதனைப்
பார்த்தறி வீர்தென் னுட்டினிலே 265

சிற்றரசர் ஆட்சி

திட்டத் திராவிட நாட்டினிலே
தேரா தயலவர் நுழைவுதனே
கட்டப் பொம்மன் ஊமைதுரை
கலங்கிட அடித்ததை அறிவீரே 266

உரிமை ஆட்சி

தென்னிலம் வடநிலம் ஒன்றென்று
தேர்ந்திடும் பரங்கியர் ஆட்சிதனைத்
தென்னில வ உ சிதம்பரனுர்
திறமொடு தாக்கிய தறிவீரே 267

ஆயிரம் ஆயிரம் மன்னர்களும்
ஆயிரம் ஆயிரம் அரசர்களும்
ஆயிரம் ஆயிரம் அவைகளிலே
அணிபெற ஆண்டுளர் திருநாட்டில் 268

சிறப்புற்ற அரண்மனைகள்

கொச்சியும் நற்றிரு வாங்கூர் முகவை காணீரே
மெச்சிடு மைசூர் பெங்களூர் அரண்மனை காணீரே
இச்சைகொள் விசாகை விசய வரசவை காணீரே
இனியுள பலபல அரண்மனை களைஎழி
[லொடுகாண்பீர் 269

இடப் பெயர்

வட்டம் கோட்டம் மண்டலமாம்
வாய்மை கோத்தே ஆண்ட திறம்
திட்டங் கமழும் பெயரதனில்
தெரிந்துக் கொள்ள வாய்ப்புளதே 270

அரசியல் முறை

சிற்றர சென்றும் பேரர சென்றும்
சீராம் உரிமைத் திறமாக்கி
பொற்புற நாட்டின் பொலிவினைக் காத்தது
பொதுஅர சியல்முறை காணீரே 271

இதுவுமது

அரச ரென்பதும் மன்ன ரென்பதும்
வேந்த ரென்பதும் தென்மொழியே
அரசியல் முறைகளை அகில மறிந்தது
அருந்தமிழ் நூல்களின் ஆய்வினிலே 272

நூலாட்சி முறை

தொல்காப் பியராம் புறநா நூற்றுத்
தொகைநூற் புலவர்கள் தொல்தமிழின்
வெல்கா வலர்கள் வீரம் தன்னை
விரிவுற கூறுதல் காணீரே 273

இதுவுமது

வில்லியும் கம்பரும் இளங்கோவும்
விரும்பிப் பாடிய பனுவலினில்
செல்வ மிகுந்தமி ழரசர்களைச்
சிறந்தே பாடுதல் காணீரே 274

இதுவுமது

ஒட்டக் கூத்தர் செயங்கொண்டார்
உயரணி தருமிரு பரணிதனில்
திட்டத் தமிழுடை அரசர்குலம்
தெளிவது நன்கு காணீரே 275

வரலாற் ருட்சி

கோப்பெருஞ் சோழன் தன்மகனும்
குணத்தில் மாற்றங் கொடுபோரில்
கோப்புற செல்ல புலமைமிகும்
குணபுல வோர்தடை காணீரே 276

இதுவுமது

சீல மிகுந்த நலங் கிள்ளி
சேவை நிறைந்த நெடுங்கிள்ளி
ஞால மறிந்த திறஞ் சொல்லி
கோவூரார் தடை கேளீரே 277

ஆதீன ஆட்சி

தரும புரத்தெழி லாதீனம்
பெருமை சிறப்புற தமிழதனில்
திருமுறை நாற்களைத் தருதொழிலால்
அருந்தமிழ் காத்ததை அறிவீரே 278

இதுவுமது

திருவா வடுதுறை ஆதீனம்
திருநா டுயர்தர பெருதானம்
உருவா கியதமிழ் வளர்ஞானம்
உலகோர் மகிழ்தர தந்தனரே 279

இதுவுமது

திருப் பனந்தா ளாதீனம்
விருப்ப முந்திடு செந்தமிழைத்
திருத் தலங்களில் மொழிதரவே
கருத் துடன்பணி செய்தனரே 280

இதுவுமது

குன்றக் குடியின் ஆதீனம்
நன்மைத் தெளிவுற நாவலியால்
நின்றக் குடிகளின் திருவளமே
இன்றைக் கறிதர கூறினரே 281

இதுவுமது

ஆரிய வீக்கம் நிறைவுறலால்
அறியா மக்கள் புரிதரவே
வீரசைவராம் தமிழ் மரபோர்
வேந்தென முறையொடு பணிசெய்தார் 282

சமய ஆட்சி

குடந்தை மயிலம் பேரூரில்
கூறும் புதுவை மடமதனில்
படர்ந்து தங்கி அரசாண்டு
பண்புள திராவிடங் காத்தனரே 283

இதுவுமது

சிவப்ர காசர் தந்தமறை
செழுதமிழ் கண்ட மூதுரையாம்
தவத்தின் நலமே தருமுறையில்
தன்மா னத்தினைக் காத்தனரே 284

கழக ஆட்சி

தமிழின் கழகம் முறைமுறையே
தமிழ்த்தென் னாட்டினை ஆண்டதிறம்
தமிழ்ச்சங் கந்தரு தனிநூலில்
தகுபுல வோர்சொல கேளீரே 285

அச்சிறப் பெழிலாம் நூல்பலவும்
ஆழ்கடல் கொண்டிட மிஞ்சியதில்
மெச்சிடு நுழைவினைத் தலைதாங்கி
மிளிர்தரு நூல்பல காணீரே 287

திரவிட ராண்ட தனித்தமிழ் மொழிதான்
திசைதிசை பலபல கழகமதில்
திருநிறை வினதாய் பலதிசை மொழியில்
திகழ்தமிழ் மறைதனி லறிவீரே 287

திராவிட முனிவர் மாணவருக்குக் கூறியது.

திராவிட முனிவர் மாணவருக்குக் கூறியது

இது நான்கு சொற்களால் ஆகிய சொற்றொடர். திராவிட நாட்டின் போர்களை மாணவர்களுக்குக் கூறிய பாடல் பகுதி என்பது இதன் பொருளாம். **(திராவிடம்—ஈண்டு தென்னகம்)**

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றின் தத்துவங்களை ஐயமறக் கற்றுத் தெளிந்து, மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக உள்ள பேரறிஞர்களை முனிவர்கள் சித்தர்கள் என்பது தமிழ் மரபு.

முனிவர்கள் அரசவைப் புலவராக இருந்து ஆட்சி மன்றத்திற்கு ஆவன கூறி அரசாங்கத்தை நடத்துதல் திராவிட முறைமை ஆகும்.

திராவிட நாட்டின் சிறப்புகளையும்
அயலவரால் நேர்ந்த தீமைகளையும்
அதனால் நடந்த போர்களையும்
போரின் தலைவர்களையும்
அடைந்த வெற்றிகளையும்
பணிபுரிந்த வீரர்களையும் விளக்குகிறது.

பொதுக்கண்கொண்டு நோக்குவோர் வாழ்க்கைவழி, அரசியல் திறமை, கலைத்துறை, முன்னேற்றவழி, சீர்திருத்தமுறை இன்பநிலை ஆகிய துறைகளில் சிறந்த கருத்துக்களைக் கண்டு மகிழ்வர்.

கலைவழி

நூலிற் பலநூல் முனிவர் சொல
நுணுகிய கலைதெளி அரசர்களும்
சிலத் தமிழுடை புலவர்களும்
செவிகொள பழகிய தறிவீரே

கொல்லிச் சாரல்

அணிஅணி யெனவரும் ஒலிகளொடு
அசைவுற வரும்திரை கடலினுடை
புணையென வளர்தரும் புவியோரம்
புலம்தேர் ஓரியின் மலையருகே 289

இதுவுமது

எழில்வளர் தளிருடை சிறுசெடிகள்
இடையிடை பலநிற கொடிகளொடு
தழைமலி தரதல விரிதலொடு
தமிழுரை யெனவிளை நிலமதனில் 290

நிலைகொளும் புகழது நெடிதளவு
நிகரில யெனவளர் இராசைதனில்
பலகிளை களிநெடு வானளவும்
படிவளர் சோலையின் நீழலிலே 291

முதுமர மதிலிணை சாய்மணையில்
முதுமதி யுடைபெரு மனிதரிடை
முதுமறை தருதிர விடமுனிவர்
முகமகிழ் வொடுநிறை தரவிருந்தார் 292

மாணவர் சந்திப்பு

திடுமென புலமைகொள் குழுவினர்கள்
திகழ்வுற தொழுதமை வொடுகண்டார்
நெடிதுடை திரவிட முனிவர்தமின்
நேர்மையைத் துணைகொள பழகினரே 293

தென்னகச் சிறப்பு

பலபல பிறநகர் சென்றுய்ந்தோம்
பரிவுள திரவிட மிணையறியோம்
கலைகளைத் தருவதில் இனிதுளதாம்
கருதரும் சுவையுடைத் தமிழறிவோம் 294

இதுவுமது

அறுசுவை உணவுடை தென்னகமே
அகமகிழ் மணமுடை மலர்களொடு
நிறைதரு தவமது நெறிமுறையாம்
நிலையுடை விளைநிலம் திரவிடமே 295

இதுவுமது

இன்பொளி தவழ்தரும் இந்நிலமே
ஏன்பிறர் நுழைதர அடிமையதாய்த்
துன்பது கொண்டது துயரறவே
தூமொழி கூறுவ தும்கடனே 296

அயலவர் யார்

தென்னகங் கண்டிட முனைந்தவரார்
தென்னவர் நண்பினை அணுகியதார்
என்னலங் கொண்டிட போர்தொடுத்தார்
எவ்வகை சூதினில் இடர்விளைத்தார் 297

இதுவுமது

இந்நிலை தனிலுள முறைமைகளை
இயம்புதல் வேண்டும் தெளிவினொடு
நந்நிலை தவமுற கலைமுறையில்
நண்பொடு நவிலுதல் நன்றென்றார் 298

ஆற்றல் அருள்வீர்

ஐயம் தெளிவித் தறிவொளி வருவித்
தறநெறி முறையினில் அரசியலால்
வையம் வளர்வித் திறையொளி பெறுவித்
துரிமைகள் பெருகிட அருள்புரிவீர் 299

முனிவர் மொழி

என்றுரை கூறிய திரவிடராம்
எழிலுடை புலவர்கள் தமைநோக்கி
மன்றுடை குழுவினி லுறுபாக்கி
மகிழ்ந்தீண் டிருக்கப் பணித்துரைப்பார் 300

இதுவுமது

உரிமைக் கிடமுடை திருவுக் கணிதவழ்
உரமுற் றிடுதமிழ் புலவீர்காள்
தருகைத் திரவிட தகுதிக் கிணையிலை
தவமுற் றியநிலம் தெளிவீரே 301

பழந் திராவிடத்தின் பண்பு

திராவிட நாடு திருவள மோடு
சீர்பண் பாட்டில் செழுமை மிக
திடமொடு நின்று தெளிவுற நன்று
சேர்ந்திட நண்புப் பெருகிய தாய்த்
திராவிட மோங்கிச் செழுதமிழ் வீங்கிச்
சிந்தனை ஓங்கிச் சீருறவே
செழுமனை யறமே செறிவுற நிறையும்
சீலம தூறிய திருவிடமே 302

உண்ணும் பொருள்நிறை களஞ்சியமே
ஊரினிற் பாதியாய் நிறைவுறுமே
உடைதமை நெய்திடும் பணிமனைகள்
ஊர்தனிற் பாதியாய் வளமுறுமே
பண்பெனும் கைத்தொழில் பலசெயுவோர்
பலபொருள் மலிதர பணிமுனைவார்
பலபல செயல்கொடு தொழில்வளமே
பரிவொடு மனைதனில் பரவினவே 303

இதுவுமது

காட்டில் உளவாம் மிருக மொடும்
கனிசூழ் மரம்வாழ் பறவை யொடும்
கலைதேர் தமிழர் விளையாடி
கடிதமிழ் உரைபல கழறுவரே
வீட்டில் மகளிர் கிளிகளொடு
விளையாட் டுரைகள் பலகூறி
விழையும் நடனம் மயிலினொடு
விரைந்தே நடித்து மகிழுவரே 304

இதுவுமது

சின்னஞ் சிறுமிகள் சீர்நடை புரிகுவர்
சீயெனு மிழிசெயல் செய்தறியார்
சின்னஞ் சிறுவர்கள் தெளிவிடைநிலவிடு
சிறந்த முறையே செய்திடுவார்
முன்னந் தவமுடை மூதறி வோராம்
முனிவர் கண்டிடு பொதுநெறியை
முன்னஞ் செய்தக மகிழ்வினை யூட்டிடும்
முதுமுறை தனிநலம் தேங்கியதே 305

திராவிட மனையறம்

வாட்டங் காணு முகமுடனே
வாஞ்சை தழைக்கும் புன்முறுவல்
வள்ளல் மொழியோ டிணையுறவே
வாழ்ந்தது மனையறம் வடிவழகாய்
நோட்டந் தோணுக் களிகடலுள்
நுழையும் வாய்ப்பைக் கடிமகனும்
நோக்கும் பெருமை மனையறமாய்
நோக்கிச் செழித்தது திராவிடமே 306

தென்னகத் தூய்மை

உழுவார் தொழிலும் உடைதொழிலும்
உதவிப் பலதொழில் யாவையுமே
உரியோர் துணையாம் மகளிர்களை
உடன்கைக் கொண்டே தான்வளரும்
பழுதொன் றறியா மனிதர் தமைப்
பார்க்கத் தேடில் தென்னிலமே
பாரென் றுலகோர் பகருகிற
பான்மை நிறைந்து வாழ்ந்ததுவே 307

கடல் கொண்ட தென்னகம்

முந்தைத் தமிழ்நிலம் பொங்கும் கடல்புகும்
முன்னாள் தென்னில மூதறிஞர்
முந்திப் பணிபல உந்தித் திசைபல
முண்டிக் கரைபல கண்டனரே 308

திராவிடர் பரவியது

தென்னுப் பிரிக்கர் தமிழ்கற்ருர்
சப்பான் மலேயா தமிழ்கற்ருர்
முன்காப் பணியாய்ச் சென்றனரே
முனேமுனே பலபல துறைவழியே 309

இதுவுமது

ஆங்காங் குளபல நிலேதனிலே
அருந்தமிழ் திரிதமிழ் நடைமாறி
பாங்காம் புதுமுறை கலேகளொடு
பலபல மொழிகள் நிலவியதே 310

நாகரீகம் மாறியது

பலபல தலேமுறை பலபல வகைகளில்
பணிவொடு செலவிவர் செல்வழியில்
நலமொடு நிலேபெற மனமது முடுகிட
நடையுடை வரவர பலகண்டார் 311

சிந்துநதிக் கரையில் தங்கிய ஓர் குழுவினர்

வடபால் பன்னுள் வாடியதால்
வந்தே கண்டார் வளமதனே
வறுமை நிறைவால் ஏங்கினரால்
வாழும் நீர்மை கண்டனரே
இடரால் வனமே தூங்கியவர்
இன்னல் நீங்க இனிமையொடு
இதுவே நன்மை நன்மையென
எண்ணிச் சார்ந்தனர் சிந்துவினில் 312

இதுவுமது

வாடிய வயிறும் குடலும் வற்றி
வடிகண் பஞ்சு பூத்ததுவே
வாதசோகையும் சீதபே தியும்
வாட்டிட ஏங்கிய நோயுடையர்
நீடிய நீரும் சோலையின் காலும்
நிலமுறு கனிகளும் வகைவகையாய்
நிறைவுறு முளமே குளுகுளு வெனவே
நிம்மதி கொண்டது உடலமதே 313

வளங்கண்டு நிலைகொண்டது

இமையச் சாரல் கங்கைக் கரையின்
எழிலைக் கண்டார் நிலைகொண்டார்
இங்கும் பங்குங் கொண்டுங் கண்டும்
இனியவை தின்றே நிலைநின்றார்
நமதேஎன்று தங்கிய நிலையை
நனிசெய் தார்கள் மணைசெய்தார்
நன்னீ ராடிப் பன்முறை யுண்டு
நலமே கண்டுந் தேங்கினரே 314

முனிவர்களை சந்தித்தது

இமைத்துக் கண்ட இடமெல்லாம்
எழிலே கண்டார் சிந்துதனில்
எங்குங் காணுப் புதுமை தமை
இனிதாய்க் கண்டார் இமையத்தே
இமையுங் தூங்கா திருளினிலே
இடருற் றெங்கும் திரிதரலால்
இன்பாம் முனிவர் தவமுறலை
இறையாய்க் கண்டார் முறைவிண்டார்

மனைவளங் கண்டது

காலைத் தொட்டிரு கண்வைத்தார்
கங்குல் பகல்தமிழ் கற்றறிந்தார்
கவனங் கொண்டருள் நிலைநின்றார்
கருதுந் திறமதை முன்செய்தார்
தோலைத் துணியென சுற்றினரே
தோலால் மனைதனைத் தூக்கினரே
தோல்பை மிதியடி தைத்தனரே
தூங்கா தெழில்தனை காத்தனரே 316

ஊன் உண்டது

ஆற்றில் கிடைத்த மீன்முதலை
அழகிய நண்டு நத்தைகளை
ஆடுகோழி பறவை யொடு
அனல்தனில் சுடசுட உண்டனரே
கூற்றென வதைத்து சேர்த்திடவே
குச்சியில் வில்லும் கூரம்பும்
கூட்டிக் கானிடை வேடரெனக்
கூடிப்பல உயிர் கொன்றனரே 317

ஆரியர் என்று பெயர் சூட்டியது

யாரிவ ரென்றே அறிதறவே
யாரிவர் யாரிவர் என்றனரே
யாரிவர் ஈண்டிவர் ஏன்வந்தார்
யாரிவர் யாரிவர் என்றதுவே
ஆரியர் ஆரியர் என்றாகி
யாவரும் ஆரியர் என்றனரே
ஆரியர் என்றதை யறியாதே
அவர்களும் ஆமென விண்டனரே 318

இதுவுமது

முதலா யிரமே கி மு முன்
மங்கோ லியரும் சித்தியரும்
முடியா வறுமை மீதுறவே
மோதும் ஆடுகள் மேய்த்தினிதே
கதியே யெனவே பாரசிகக்
கணவாய் வழியே துரேனியராய்க்
கடிதே வந்து தங்கியதாய்க்
கழுரும் நூல்கள் பலஉண்டு 319

தென்னுடடைதல்

சிந்துக் கரையில் தங்கியவர்
சின்னுளிருந்து தென்னுட்டை
சிந்தித் துள்ளே வந்தியல்பாம்
செந்தமிழ் கண்டு வியந்தனரே 320

நூலகத்தைக் கண்டது

ஓலைச்சுவடிப் புத்தகமும் உண்மை கூறும் நூலகமும்
வேலைத்திறனும் நற்கலையும் விளைவதைக் கன்டனர்
[திருநாட்டில் 321

கற்பின் ஆற்றலைக் கண்டது

கற்பெனு முரிமை பொலிவுறவே
கடிதினி லொருவனைத் திருமணமே
பொற்புற மனைவாழ் புகழுணியைப்
புனைதறு மழகினைக் கண்டனரே 322

ஒற்றுமையைக் கண்டது

கட்டுக் கோப்பாம் திறலுடனே
கடமை கண்ணிய முறைமையொடு
கட்டுப் பாடுடை கலைநிறைவைக்
கண்டனர் திராவிடர் கடிமனையில் 323

கலைநூற்களைக் கண்டது

பொருள்நூல் களையும் அருட்கலை களையும்
பொறிநூல் களையும் தொழிற்கலையும்
பொருநூல் களையும் போர்முறை களையும்
பொலியக் கண்டனர் திருநாட்டில் 324

அரசியல் துறைகளைக் கண்டது

மன்னன் செங்கோல் மரபுகளும்
மாண்புடை அமைச்சர் ஒற்றர்களும்
முன்பின் னிடைசெயல் முறைமைகளும்
முழுநிறை படைதுணை கண்டனரே 325

நாட்டின் பண்பு

உறுபசி யறியா விளைநலனும்
உடலுழை தருபிணி யறுநிலையும்
செறுபகை விளையா சீர்நெறியும்
சேர்ந்திடக் கண்டனர் திருநாட்டில் 326

இதுவுமது

பல்குழு வமையாப் பாங்கினிலே
பாழ்செயு முட்பகை தோன்றுதே
கொல்குறும் பில்லாக் கோன்முறைமைக்
குடிகொளக் கண்டனர் திருநாட்டில் 327

பொய்யொன் றுண்டென் றறியாரால்
மெய்யை உடலாய்க் கொண்டனரே
செய்யும் தொழிலில் பயன்பலவாய்ச்
செழிக்கக் கண்டனர் திருநாட்டில் 328

நாட்டின் நிர்வாகம்

ஆன்ருேர் புலவர் சான்ருேர்கள்
ஆண்டவ ரமைச்ச ரதிபதிகள்
கோன்தே ரவைகள் கலைமுறைகள்
குடியுறக் கண்டனர் தமிழ்நாட்டில் 329

இதுவுமது

கடலும் மலையும் நிலவளமும்
கருதும் பொருளைத் தருவதுவும்
வடவர் தெற்கை எதிர்பார்த்து
வாழக் கண்டனர் வழிவழியாய் 330

வேடம் புனைந்தது

நம்பும் தமிழரைக் கண்டார்கள்
நம்பும் வேடம் பூண்டார்கள்
நம்பும் கற்பனை விண்டார்கள்
நம்பும் செயலினைச் செய்தார்கள் 331

உண்மையை மறைத்த கற்பனை

செந்தமிழ் தந்த கருத்தை யெலாம்
சேர்த்தே மறைவாந் தம்மொழியில்
முந்துற வென்ற முறைமைபடி
மொழிபெயர்த் தெழுதினர் தீதமைய 332

இதுவுமது

தஞ்சைத் திருமறைக் காட்டினிலே
தமிழின் முனிவர் தமைநாடி
கெஞ்சிக் கேட்டு முறைகற்றுக்
கேளா மொழியிற் கோத்தனரே 333

இதுவுமது

வஞ்சம் சூது பொய்களையும்
வழக்கே இல்லா முறைகளையும்
பஞ்சம் சூழும் நிலைகளையும்
பகைமை மூட்டி நூல்செய்தார் 334

இதுவுமது

ஊழ்தான் முன்னென உண்டாக்கி
உயர்நிலை குலைவுற மடமேற்றி
வாழ்வென் றிழிகுல முண்டாக்கி
வலிமை சிதருறச் செய்தனரே 335

இதுவுமது

தெற்கே வளரும் தேவைகளைத்
திராவிடர் தின்று களிப்பதனைக்
கற்கா நிலையில் கடவுள்நிலை
கற்பித் தழிக்க செயல்கண்டார் 336

வீண் செலவைத் தூண்டியது

வீட்டைக் கோட்டைகள் போல்கட்டி
வேந்தென வாழ்ந்தோர் பொருளையெலாம்
போட்டிக் கடவுள் கோயில்பல
புதுகோ புரமென போக்கினரே 337

பொருள்களை வீணாக்கியது

குடித்து வந்த பாலையெலாம்
கோயில்பேரால் நாசங்கள்
தடித்த நெய்யை யாகத்தால்
தான்வீ ணாக்கத் துணிந்தனரே 338

இதுவுமது

ஆண்டுக் காண்டு செல்வர்தமின்
அழியாப் பொருளைச் சிதைவுசெய
வேண்டித் திருநாள் திருமணமும்
விதவித மாகத் தூண்டினரே 339

இதுவுமது

யாகத்தால் பல நாசங்கள்
யூகத்தால் பல நாசங்கள்
மோகத்தால் பல நாசங்கள்
முனைவுற செய்தனர் திருநாட்டில் 340

மூடபக்தியை வளர்த்தது

நாளில் நல்லவை கெட்டவை யூட்டி
நாட்டில் செலவை வளர்த்தனரே
கோளில் நல்லவை அல்லவை காட்டிக்
கோயில் சுற்றச் செய்தனரே 341

இதுவுமது

அவரவர் தகுதிக் களவளவாக
அடிமை நுழைத்தே பலநூலைக்
கவறுடைதெய்வக் கலைகள் கதைகள்
கனிவொடு செய்தே ஊட்டினரே 342

அயலவர் எண்ணம் வளர்ந்தது

வேற்றெண் ணத்தின் வித்திட்டு
மாற்றெண் ணத்தின் எருபோட்டுக்
கூற்றெண் ணத்தின் நீர்பாய்ச்சிக்
கொழுந்திட் டாரியம் வளர்த்தனரே 343

தமிழைக் கெடுத்தது

தமிழின் கலைகளை எரியினிலும்
　　தகுநதி தனிலிடல் நன்றென்றார்
நமதடி மைகளதை நல மெனவே
　　நருந்தமி ழேட்டினை அழித்தனரே 344

மடமையை வளர்த்தது

அவரவர் தலைவிதி எனுமாறு
　　அணிதவழ் தமிழினில் துதிபாடி
அவரவர் கடமையைக் கடவுள்பணி
　　ஆக்கிடு மடமையை வளர்த்தனரே 345

அகம் புறம் சீர்கெட்டது

இம்மை மறுமை யென்றுள கலையை
　　இவ்வுல கவ்வுல கென்றாக்கி
செம்மை அகமும் புறமும் என்றுள
　　சீரினை கெடுத்திழி வாக்கினரே 346

தமிழ் மருத்துவம் கேடுற்றது

உடல்நோய் தன்னை இலைபூ காய்வேர்
　　உணவால் நீக்கிய நோய்களினை
கடவுள் பணியால் நீங்கிடுமெனவே
　　கடிமனை மருத்துவங் கலைத்தனரே 347

மடமை நிறைந்தது

கடவுள் காப்பார் நீங்கள் பக்தியைக்
　　கனிவுடன் செய்வீ ரென்றாக்கி
மடமை சேர்த்தே கடமை தவறும்
　　மதியொடு வறுமை சேர்த்தனரே 348

வறுமை தேங்கியது

நம்பும் தென்னாட் டன்பரெலாம்
நம்பிக் கெட்டா ரின்னிலையில்
தெம்பும் திறலும் வெளியேக
தென்னிலம் பஞ்சம் சூழ்ந்ததுவே 349

அன்பொடு தாவி ஆருயிரோடு
அகமகிழ் வாயுள தமிழரினை
துன்புற மேவித் துயர் செயக்கூவித்
துகளினை வளர்த்த தறிவீரே 350

ஒருமன தாக ஒருகுல மாக
உயிரென குழுவொடு வாழுநரை
திருடுறு வாக பகை குணமாக
திறமழி தருமதி நிறுவினரே 351

அரசியலில் பகை மூட்டியது

அமரது முனைதர அசுரரை புடைதர
அதைபல ரிடமுறை சொலியுள ரிடையிடை
சமநிலை விளைதலில் சமரவ ரெனுமொரு
சமர்குல மதுவுற சமநிலை பெருகில 352

தொழிலில் வெறுப்பை மூட்டியது

தொழில்வள முடையரை தொடவிழி வெனசொலி
பழியுடை பெயரதை தமிழர சென்றனர் 353

தவமது புரிபவர் தமதறி வறிகுவர்
புவிநல முறுபவர் புகழிழி வென்றனர் 354

கலைதெளி வுறவே கடிதாண்ட
 கருதரு மரசினை மடிபூண்ட
நிலையென வசையாலுரை தூண்டி
 நிலைகளை யழிபட பழிகொண்டார் 355

தமிழகத்தை இழிவாகக்கூறியது

செந்தமிழ் நாடெனும் தென்னிலனை
 சொந்த மிலாதுடை புன்னிலனுய்
வந்தவர் செய்தனர் பன்னிலையில்
 தந்தனர் முந்திய நண்பிடரே 356

பகைமை தூண்டியது

வேண்டும் பொருள்களை யாண்டும் பெறகலை
 தோன்றும் முறைபல கூறினரே
தூண்டும் செயலினை பூண்டும் கரவொடு
 நீண்டும் சமரினை தூண்டினரே 357

அடிமைப்படாத திராவிடம்

யார்யார் எம்முறை நிலவிடினும்
 யார்யார் சூழ்ச்சிகள் செய்திடினும்
நீர்மேல் குமிழெனப் பகையழிய
 நிகரறு திராவிடம் செழித்ததுவே 358

மறைகளை மறைத்த தமிழ்த்தொண்டு

திக்கெட் டஞ்சும் சோமுகனும்
 தீர சங்கமன் அயக்ரீவன்
இக்கட் டாரிய ஏடுகளை
 எடுத்தே கடலுள் புதைத்தனரே 359

தமிழ் காத்த வீரன்

இணையறு தமிழக எழிலர சுடையான்
எதிரறு மிரணிய அதிகாரன்
குணமொடு பொதுநல உடைமையைத் தருவதில்
குறைதவிர் முடியுடை குணசீலன் 360

இதுவுமது

இமையவர் தமிழர்கள் எனுமுறை யறதொழில்
எழிலொடு செயுமுறை பணிசீலன்
சுமையற பகைவரும் இயைவுற தனிமொழி
தமிழினைக் காத்திடும் பெருவீரன் 361

ஆட்சி காத்த அறவோர்

தென்னிலங்கை முடி மன்னனிராவணன்
தேடறு மரசியல் திறமையினன்
மன்னன்மாவலி நன்மைக ளோங்கிட
மாண்பொடு திராவிடங் காத்தனரே 362

மூவேந்தர் ஆட்சி

வில்லுக் கொடியுடை சேரல ஆட்சியைக் கேளீரே
வீரப்புலிக்கொடி சோழரின் வேந்தவை கேளீரே
வெல்மீன் கொடிதிகழ் பாண்டியராட்சியைக் கேளீரே
வெற்றிமிகுந்திட நாட்டினை ஆண்டனர்
[வீரமொடு 363

ஆங்கிலேயர் ஆட்சி

இந்நிலை யறிந்த அயலவராம்
இரக்கங் கொண்ட வெள்ளையர்கள்
நந்நிலை கொண்டு அரசாண்டு
நலம்பல செய்து மீண்டனரே 364

இதுவுமது

ஆங்கில ராண்ட அங்கிலேயில்
அடக்கு முறையின் துணைகொண்டு
தேங்கிய தெற்கும் வடக்கொன்றுய்ச்
செய்தனர் பொருளைச் சேர்த்திடவே 365

இதுவுமது

வெள்ளைய ராட்சி நிலவிடவே
வீரச் செறிவால் புதுமைவளம்
தெள்ளத் தெளிவாய் வளர்தரவே
தேக்கப் பொதுநிலை தூக்கியதே 366

வடக்கினர் ஆட்சி

ஆரிய ஆட்சி அழிபடலை
அறிந்த வடவர் வெள்ளையரை
வீரிய மோடு வெளியேற்ற
விரைந்து நின்றுர் காங்கரசென 367

இதுவுமது

காந்தித் தலைமை தனையேற்று
கருணை மீது வரிமாற்றம்
சேர்ந்து செய்து உரிமைதனை
சிறந்து பெற்றுர் சீருடனே 368

பாகித்தான் விடுதலை

விடுதலை பெற்ற திருகாந்தி
வீரங் கொண்ட சின்னுவின்
கடமையை கேட்டுத் தந்தனரே
கனிவால் சிறந்த பாகித்தான் 369

தென்னக விடுதலை

திராவிட மரபுடை வழிவந்தோர்
தென்னாட் டுரிமை கோரியவர்
திராவிட அம்பேத் கார்தனையே
தெளியா அடிமை ஆக்கினரே 370

காந்தி தன்னால் காத்திட்டக்
காங்கிர சென்னும் பிறகுழுவை
காந்தி தன்னால் கலைத்திட்டக்
கதைகள் யாரும் கண்டதுவே 371

இன்னும் விட்டால் திராவிடமும்
ஏகும் தென்னாட் டவர்க்கென்று
முன்னம் சுட்டார் காந்திதனை
முழுதும் கண்டார் யாவருமே 372

வட வாணிப ஆட்சி

வடநாட் டினில்வாழ் செல்வரெலாம்
வணங்கா மனத்து முடிவுடனே
திடமாய் அரசியல் தனையேற்றுச்
சீர்கெட ஆண்டனர் வடநடையில் 373

தென்னக அடிமைவாழ்வு

எடுத்ததற் கெல்லாம் வடவரைக் கேட்ப
திந்நாட் டவரின் தொழிலாச்சு
கொடுத்ததைக் கொண்டே நம்முடை வாழ்வைக்
குறைபட செய்யும் நிலையாச்சு 374

தென்னில நலஉரிமைக் கழகம்

வடவா திக்கம் மக்கள் வாழ்வை
வளமே செய்யா திருப்பதனை
திடமா யெதிர்த்துத் தென்னாட் டுரிமைத்
திரக் கழகம் திறந்தனரே 375

இதுவுமது

தென்னில மக்களின் அரசுரிமை
தேர்வினில் நடைபெற அளவினொடு
தென்னில மினிதுற வாழ்வதனைத்
திறமொடு கூறினர் தெளிவினொடு 376

இதுவுமது

பானக லரசர் மாதவ நாயர்
தியாக ராயர் மற்றோரும்
மேனிலை கொண்டு பலநிலை செல்வர்
மிகைதவ முரசியல் பணிசெய்தார் 377

தென்னக சீர்கேடு

வடவரி னாட்சி இடர்தமைவிண்டு
வாதுகள் சூதுகள் தான்கொண்டு
திடமொடு நின்று திராவிடந் தன்னை
சீர்கெடு முறைமை செய்தனரே 378

அரசியல் அறிஞர்கள்

அந்நிலை அறிந்த திடவீரர்
அரசியல் கண்ட அறிவுடையோர்
நன்னிலை வரத ராசுலுவாம்
தென்னில திலகம் முன்வந்தார் 379

இதுவுமது

தவமலி தருமுறை மறைமலையும்
　　தகுதுணை பெரியார் ஈவெரா
புவிநல இராச கோபாலும்
　　புகழ்திரு விக போற்றினரே　　380

ஒற்றுமை கலந்தது

இவர்களுள் ஆரியம் இடைநுழைய
　　இடுக்கணி லாழ்த்தி இடர்செய்து
தவலறும் நெறிகள் தவறுதலால்
　　தக்கவர் ஒற்றுமை கலந்தனவே　　381

சுயமரியாதை வளர்ச்சி

ஈரோட் டதிபர் பெரியாராம்
　　இராம சாமி தென்னாட்டின்
போராட்டத்தில் தலைமை பெறப்
　　போர்ப்படை திரட்டினர் திருநாட்டில்　　382

இதுவுமது

செங்கற் பட்டில் மாநாடு
　　சிறந்த முறையில் கூடியதே
எங்கும் வீரம் மூண்டதுவே
　　இணையறு சுயமரி யாதைபெற　　383

இதுவுமது

சுயமரி யாதை சுயமரியாதை
　　என்றெங் கெங்கும் மொழிகூறி
பயமறியாமல் துணிகர மாக
　　பகுத்தறி வூட்டினர் பெரியாரே　　384

இந்தி எதிர்ப்பு

இந்தித் தெரியாத் தென்னுட்டில்
இந்தியி லெழுதிய பெயர்களினை
தந்தைப் பெரியார் அழித்திடுபோர்
தம்மில் வெற்றி கண்டனரே 385

ஒற்றுமை வளர்ச்சி

சாதிப் பிளவை நீக்கிவிட
சமரசப் போரை நடத்தினரே
நீதிச் சட்டம் உண்டுசெய
ஆரிய சட்டம் எரித்தனரே 386

இதுவுமது

கொழுத்தே ஒருசார் திமிருடனே
குறைகள் கூறி வாழ்வதுவும்
இழைத்தே ஒருசார் மருளுடனே
இருப்பதைத் தடுத்தார் மாநாட்டில் 387

இதுவுமது

மக்களில் நான்கு மரபெனும் தாழ்ந்த
வகுப்பினை அழித்தார் ஈ வெ ரா
இக்கலி கொடுமை என்றுரை கூறி
ஏய்த்ததை எதிர்த்தே முறைவிண்டார் 388

பெரியார்த் தொண்டு

வயது முதிர்ந்தும் நெஞ்சந் தளரா
வீரப் பெரியார் ஈ வே ரா
வயது நிறைந்தோர் வழிவழிவந்த
வாய்மையை விண்டார் மிகைபடவே 389

இதுவுமது

மணிக்கு பலதொலை ஓடிஓடி
மதியை வளர்த்தார் ஈ வே ரா
கணக்கு வழக்கு இல்லாதெழுதிக்
கலையை வளர்த்தார் ஈ வே ரா 390

திராவிட மாநாடு

நீதிக் கொள்கை மாநாடு
நேர்மை சேலம் தனில் கூடி
கோதில் திராவிடத் தனியாட்சி
கொடியுட னுண்டிட முனைந்தனரே 391

நெடுநிலமல்லார் மாநாடு

நெடுநில மல்லார் மாநாட்டை
நிறைதரு ராசை தனில் கூட்டி
நெடுநிலை யுடனே மக்களெலாம்
நிறைவுடன் வாழச் செய்தனரே 392

பலசிலை எதிர்ப்பு

உள்ளத் திறையை மறைத்தாங்கே
உருவப் பலசிலை மலிவுறலின்
உள்ளத் திறையைத் தெளிவாக்கி
உரிமை வாழ்வினைக் காத்தனரே 393

உலகில் பலபேர் பெரிய ருளர்
உறுதியில் நாட்டினைக் காக்கவிலை
மலைபோல் சிலை போல் நிலைநின்று
மலையாப் பெரியார் பணிசெய்தார் 394

படை வலிமை

முற்று முணர்ந்திடு மறிஞரொடு
    முன்பின் சலியாத் திறமைதனுல்
வெற்றி குணத்தினை பெறமுனையும்
    வீர மிகும்பெரி யார்படையே 395

வீரச் சொல்லாற்றல்

பெரியார் பலமுறை போர் செய்தார்
    பெரியார் பலமுறை சிறைசென்ருர்
விரிவா முறை யொடு வலிவுடனே
    வீண்வட வரைமிக தாக்கினரே 396

விடுதலைப் போர்

திராவிட அரசிய லுரிமை பெற
    திராவிட இனமது வலிமையுற
திராவிட நிலமது உரிமை யுற
    திறநான் காயிரர் சிறை சென்ருர் 397

திராவிடப் படைத் தலைவர்கள்

தொண்டின் முன்னணி வீரர்களாய்த்
    திகழ்ந்தார் விசுவ நாதனுமே
தொண்டுறை தளபதி அண்ணுவும்
    துணைகுரு சாமிபா ரதிதாசன் 398

இதுவுமது

அஞ்சா நெஞ்சன் அழகிரியாம்
    அன்புடை வீரர் பலருடனே
மிஞ்சும் பணிகள் திராவிடத்தில்
    மிகைபட வளர்நிலை மேவியதே 399

நேருவின் சீற்றம்

இந்நிலை அறிந்து வடநேரு
இழிவாய்த் திராவிட மரபினரை
தந்நிலை மறந்து தாக்கியதால்
தணலென மூண்டது தன்மானம் 400

அண்ணாவின் எழுச்சி

திசைஎட் டும்பணி திராவிடரின்
திறமையை உணரா வடமதியோர்
வசைமொழி தனைசொலி திரிதருமோர்
வடகுழு தொடர்பறும் வகைசெய்து
இசைகொட் டும்களம் இனிதுறவே
எங்கெங் கும்கிளை இணையுறவே
எழுந்தனர் அண்ணா வீரமொடு
எழுந்தன படைகளும் எங்கணுமே 401

முன்னேற்ற வழி

திராவிட நாட்டைத் தனியாக்கி
தென்னக ஆட்சித் திறல்கூட்டி
திராவிட கலைகளைக் காத்திடவே
திண்மை முன்னணி கொடிநாட்டி
திராவிட நாட்டின் தனிஆட்சி
திறமுட னுண்டு வளமுறவே
தேயம் முழுமையும் முன்னேற்றத்
திறமைத் தொண்டர் சூழ்ந்தனரே 402

தென்னகப் பொலிவு

வடக்கது வளமுறும் வழிகளையும்
தெற்கது தேய்வுறும் தீமைகளும்
வடக்கினர் வாணிபம் வெளியாக்கி
தெற்கினில் வீரம் தேக்கினரே 403

கருத்துச் செறிவு

அண்ணா நடையின் அழகு மொழி
அத்தனை திராவிடர் உளம்ஊறி
திண்மை பெறவே கிளை கிளையாய்ச்
செழித்தது கொள்கை சீலமொடு 404

பொருட் பொலிவு

அடுக்கு மொழிதனில் அறிவொடு மொழிகுவர்
கருத்து செறிவுற கலைமுறையில்
திடத்தொ டதைபெற திரளொடு குழுவென
திறத்து முனைகுவர் அவைகளமே 405

இந்தி எதிர்ப்பு

இந்தி என்ற பிறமொழியை
இங்கே நுழைக்க முயன்றதனை
சந்தி சிரிக்க எதிர்த்தேதான்
தப்பென் றுக்கித் துரத்தினரே 406

மக்கட் பேரவை

கூட்டம் போட்டால் கொள்ளாது
குற்றமும் ஐயமும் நில்லாது
நாட்டுத் தலைவர் சொல்வல்லோர்
நன்முறை கற்ற திறமையினர் 407

அறிஞரின் அருஞ்செயல்

சொல்லின் வஞ்சச் சூதுகளைச்
சொல்லிச் செயலால் ஏமாற்றும்
புல்லறி வினரைப் புறங்காணும்
சொல்லிடி யேறெம் மண்ணவே 408

இதுவுமது

எண்ணித் துணியும் செயலினொடு
பின்னடை யாதப் பேச்சமையக்
கண்ணியம் கடமை கட்டுடைய
அண்ணாத்துரை யெனும் அடலேறே 409

இதுவுமது

புள்ளி யளவொடு தெள்ளிய நடையில்
புரியும் படிநெடு நீளுரையால்
கொள்ளை நிலைகளை கோடி கோடியாய்க்
கூறினர் மேடையில் நாடெங்கும் 410

திராவிடம் அடிமை அல்ல

உலக வாணிப நிலையை காப்பது
ஒருவட நாடோ ஒப்போம்நாம்
தலைபொருள் தருநம் திராவிட முலகில்
தனிஅர சாண்டது சான்றன்றோ 411

திராவிட உணர்ச்சி

திமுகவின் தீரப் படையது
திரள் திரளாகத் திரண்டனவே
கிமுதிராவிட கீர்த்திக ளேபோல்
கிளைதொடர் கிளையாய்ப் படர்ந்தனவே 412

திராவிட உரிமை

நம்மின் தேயம் தென்தேயம்
நம்முடை கழகம் முன்னணியாம்
நம்நாட் டரசியல் நாமேற்று
நாட்டைக் காத்திட முறைவிண்டார் 413

இயற்கை அறிவு

அறிவே மங்கிய காலமதில்
அறியாமைக்கு நில மிலதாய்த்
திறமை தன்னைக் காத்ததிறல்
தென்னாட் டவர்க்குப் புதியதல 414

ஆன்றோர் வழிமொழி

கற்றவர் போற்றும் கடிதமிழும்
கருத்துடை யெழிலாம் பலகலையும்
நற்றவ முனிவர் நன்மொழியும்
நடுநிலே யுடனே வளர்ந்தனவே 415

தேர்தல் போர்

வடவரி னாட்சியின் தேர்தல் போர்
வலிவொடு வரவே திராவிடர்கள்
திடமொடு பலதுறை முனே தனிலே
தேர்ந்திட திராவிடம் வென்றதுவே 416

தேர்தல் வெற்றி

வடவ ராட்சி குலேய மாட்சி
வளர ஆட்சி பெற்றனர்
கடமை யேற்று மடமை தூற்றி
கயமை போக்கி வாழ்ந்தனர் 417

திராவிட ஆட்சி

முன்னாள் காத்திடு திராவிடம் போல்
முறையாய் காக்கும் நிறையரசை
நன்னாள் கொண்டு கொடி நாட்டி
நலமொடு திரவிடம் காத்தனரே 418

இரா. நெடுஞ்செழியன்

சிறுசிறு தேயம் தனித்தனி வாழ
செறிவுடை தென்னகம் வாழாதா
திறமில தான பலநிலம் வாழ
திறலுடை திரவிடம் வாழாதா 419

திராவிட முன்னேற்றத் தொண்டு

ஒற்றுமை ஒன்றே சொத்தென நம்பி
ஒருகுடி மனையென வாழோமா
வெற்றுள முடையோர் முற்றிடு வடவர்
வெருவுற நாமர சாளோமா 420

ஒருபொருள் எதுமே குறைவில தான
திராவிட நாட்டினைப் பேணோமா
பெருகிடு போரில் பெயர்பெறு நம்மைப்
பேசிடும் நூல்வழி காணோமா 421

பாண்டி மண்டலம் ஆண்ட நற்றிறம்
பற்பல நூற்களில் காணீரோ
பூண்ட சேரரும் சோழரும் வீரம்
புரிந்ததை நூற்களில் காணீரோ 422

அன்றைத் தமிழும் இன்றைத் தமிழும்
அயல்மொழி தமிழுணர் அடைமொழியும்
பின்னைத் திரவிட பெருநெறி தனையும்
பேசினர் நாவலர் நெடுஞ் செழியன் 423

மு. கருணாநிதி

போருக் கஞ்சிடு போலிக் குழுவோ
பொலிதரு மறிவுடை தென்னவர்கள்
யாருக் கஞ்சா நடுநிலை அரசினை
நாமிங் காண்டிடத் தடையேனோ 424

மடமையின் வலைகொடு பிளவூட்டி
மதியறி வெனபல சூதூட்டி
வடமொழி யெனுமொரு போரூட்டி
வருகிற வடவர்கள் கைகாட்டி 425

கலிங்கம் வென்ற கருணா கரனின்
காஞ்சிப் பரணியை காணோமா
இலங்கும் செஞ்சி தேசிங் கரசன்
இமயம் வென்றதை புரியோமா 426

சினந்து சீறிச் சிறை செய்தே
சீயென வெறுக்கும் வடவர்தமை
முனைந்து போரிடல் எளிதெனவே
முன்னவர் கண்டதை அறியோமா 427

வீரத் தொடுதனித் தமிழினிலே
விழையும் கருத்து விரைவுறவே
காரத் துடனுரை கூறினரே
கருணா நிதிதன் கலைத்திறனால் 428

க. அன்பழகன்

சுயநல வடகுலம் நாமல் லோம்
சுவையுணும் தென்குலம் நாமாவோம்
சுயமரி யாதையின் வழியறி வோம்
சூழ்ச்சிகள் பலவினும் தேர்ந்துள்ளோம்
நயமொழி வடநிலை நமதலவே
நாம்பிறர்க் கடிமையைக் கண்டிலமே
நம்திரு நாட்டினை நாம்ஆளல்
நலமெனக் கூறினர் அன்பழகன் 429

இதுவுமது

அடிமையைத் தேடுவர் வடவழியோர்
அடிமையை இழிவெனல் தமிழ்முறையோர்
குடிமையிற் பலர்மணம் வடவழியாம்
குலமகள் வாழ்மனை தென்புலமே 430

சிற்றரசு

இளமொழி தமிழின் விளைவிட மிதுவே
இசைதனில் வகைவகை இனிதுறவே
தளிரென படரும் தகையின தமிழே
தனியர சாண்டிட தடையேனோ 431

நமதுடை நாட்டின் நமதெழி லாட்சி
நமதிட முறைய குறுக்கேயார்
இமைவிட மாட்டோம் சமர்தனை கூட்டோம்
உரிமையீ தென்றார் சிற்றரசு 432

நடராசன்

வீரத் திறலொடு தீரத் திராவிடம்
வேங்தென ஆண்டிட முன்னிற்போம்
யாரைக் கேட்பது யாரெதை யீவது
நம்திரு நாடிது நமதேயாம் 433

சீருடன் வாழும் தென்னகம் தனியே
சேர்ந்தர சாளுதல் முறையெனவே
தாருடன் வாழ்ந்தத் தலைவர்கள் கண்டார்
தகுமீ தென்றூர் நடராசன் 434

மதியழகன்

நுண்மதி யறியா புன்மதியாம்
நோயுடை வடவர் தொடர்விடுவோம்
திண்மதி யழகன் தெளிவுரையால்
சிறந்த வீரம் செழித்ததுவே 435

ஆசைத்தம்பி

காசுக் கொருபொய் கூறிடுவோர்
கயமைச் செயலே செய்வடவர்
நேசித் திடதிர விடமாள்வோம்
ஆசைத் தம்பியின் அறவுரையே 436

நகைச் சுவை நடிகர்

திரைப்பட கலைஞர் நகைச்சுவை நடிகர்
தென்னு டெழிலுறப் பணிசெய்தார்
திறத்தொடு நகையும் அரசியல் வகையும்
தெளியும் நாஞ்சில் கிருட்டினரே 437

நடிகர் இராமச்சந்திரன்

திரவிட நெறிமுறை புதுவுள மதிலெழ
திடமுள நடிகரில் ஒருதனியாய்
பரவிட தனியர சதுமிகு விரைவொடு
பயன்பெற திரவிடம் பாடினரே 438

நேமித் திடுகலை வளமுறவே
நீடித் தரசியல் வாழ்வுறவே
இராமச் சந்திரன் திரைகலையில்
வாழ்வுத் திராவிடம் வாழ்த்தினரே 439

நடிகர் இராசேந்திரன்

பண்டுள வேந்தரின் பண்பமைய
பாங்குறு திரவிட முறையமைய
திண்கலை அரசியல் தெளிவுபெற
திரைக்கலை பயனுற நடித்தனரே 440

அடமுடை வடவர்கள் மடமைதனின்
இடரது விடுபட திரவிடரின்
கொடியது படர்தர திரைக்கலையால்
நடிகரில் முந்தினர் இராசேந்திரன் 441

நடிகர் இராமசாமி

வடவர்க் கேது தெற்காட்சி
வாழ்வுக் குறைவிடம் தென்காட்சி
முடக்கிப் பொருளைப் பெறசூழ்ச்சி
மோதச் செய்வது வடவாட்சி 442

நடித்தே வீரம் நாட்டியவர்
நாட்டில் தீரம் காட்டியவர்
வடித்தே நடிப்பைக் கூட்டியவர்
வளமார் நடிகர் இராமசாமி 443

நடிகர் நாராயணசாமி

திறமை அற்ற வடவர் பற்ற
விடுதல் கற்றோர் கடமையோ
கரவு பற்ற மடமை சுற்ற
வடுகள் முற்ற விடுவதோ
அறம துற்ற நமது சுற்றம்
அரசை பெற்ற தறிகிலீர்
தரகு கற்ற வடவர் பற்றை
விடுதல் கற்றோர் கடமையே 444

இதுவுமது

தீராப் பகை மாறாப் புகை
வேரறுத் திகழ் வடவரென
நாரா யண சாமித் திறல்
சீராய்ச் சொலி முந்தினரே 445

திராவிடம் முன்னேறியது

இத்துணை எழிலால் திராவிடர் உளமே
இனிதுற தேறி இடர்வினையும்
எத்துணை பிளவும் பகையும் நீக்கி
இனிதுற ஆண்டனர் திரவிடமே 446

திராவிட ஆட்சி

கி மு வந்த தென்னக போர்தான்
கி பி இரண்டா யிரமுடிவில்
தி மு க வின் திறபடை முனைவால்
திராவிட ஆட்சித் தோன்றியதே 447

அயலவர் முறையீடு.

அயலவர் — பிறநாட்டினர்-ஈண்டு ஆரியர். வடக்கிலிருந்து தென்னகத்துக்குக் குடியேறிய ஒருவகைக் கூட்டத்தினர். இவர்கள் திராவிடரோடு ஒன்றுபட்டு வாழாமல் பொறாமை கொண்டு இந்நாட்டு வளத்தைக் கெடுத்து நாகரீகத்தை மறைத்து அரசியலைக் கவிழ்த்து சீரழித்தார்கள். அன்பிற் கிணங்கிய திராவிடர்கள் இவர்களை நம்பி ஏமாந் தார்கள் அந்நிலைகளைப் பாடிய **செய்யுட்பகுதி** என்பது இதன் பொருளாம்.

ஆரியர் தமிழைக் கண்டது

தமிழைக் கண்டார் திறம்கண்டார்
தாழ்வுடை ஆரிய நிலைகண்டார்
நமரைக் கண்டார் மதிகண்டார்
நமதே யென்று முறைவிண்டார் 448

திராவிடநெறி கண்டது

திராவிட வீரந்தனைக் கண்டார்
திராவிட வாழ்க்கைச் சீர்கண்டார்
திராவிட போரின் முறைகண்டார்
தேயும் சூழ்ச்சியைத் தேர்ந்தனரே 449

இதுவுமது

தென்புல திராவிட சீர்மையினை
தீமை செய்யா விடிலுலகம்
என்னில முடையவ ரெவரெனினும்
எழில்திர விடமுறை ஏற்றிடுவர்

இதுவுமது

என்றே கண்டனர் எழுச்சியொடு
எழில்மிகு பலதுறை ஆய்ந்தனரே
கொன்றே முடியர சழிப்பதெனை
கொண்டனர் கடவுளின் கொடியடியில் 450

நூல் முறைகளில் சூழ்ச்சி

நான்மறை அறுநூல் உபநிடதம்
நயமாம் புராணம் காவியமும்
வான்முறை கடவுள் வழிமுறையும்
வகுத்தனர் வடமொழி வழிநடையில் 451

இதுவுமது

சூதும் வாதும் வஞ்சகமும்
சுமைசுமை யாகக் கற்பித்தார்
தீதுகள் மோதும் சதிகுழுவைத்
திரள்திர ளாகச் சேர்த்தனரே 452

மடமை வளர்ச்சி

எங்கு திராவிடர் முன்வரினும்
அங்கங் கமர்செயத் தூண்டினரே
பொங்கும் வளமதை சீர்குலைத்தார்
புதுபுது மடமையை வளர்த்தனரே 453

இதுவுமது

தந்திர மெனபல மறைசெய்தார்
மந்திர மெனபல முறைசெய்தார்
இந்திர சாலம் எனவிண்டார்
எண்திசை களிலும் பரவினரே 454

இதுவுமது

அன்பில் நின்ற நிறை தமிழர்
ஆரியர் கூறிய கரவுரையை
இன்புடை நன்றே என எண்ணி
இழிவினர் ஆயினர் பலநிலையில் 455

அடிமையை வளர்த்தது

கடவுளை வணங்கி மடிமையி லிணங்கி
கலைநிறை பிணங்கி கயவர்களாய்
வடவரை வணங்கி அடிமையில் பிணைந்து
வழியுற முனைந்து முறைகண்டார் 456

கடவுள் செயலென்ற கயமை

பொருளியல் பொறிகளை தவறென்றார்
புதுமையை அறிவது இறையென்றார்
அருளியல் திறல்களை பெறவென்றார்
அறிஞரின் முடிபென வழிவிண்டார் 457

வஞ்சத்தை வளர்த்தது

கண்ணன் வடமுறை பாரத மென்னும்
கதையில் கூறிய கீதைதனில்
கழறிய சூதாம் நயமொழி யதனைக்
கலையென கற்றார் நிலைபெற்றார்
வண்ணங் கொடுபல எண்ணம் தனைபிற
வென்னும் வழிதனில் செலநின்றார்
வஞ்சந் தருகிற நெஞ்சம் தனையறம்
கொஞ்சும் படிமுறை கற்பித்தார் 458

பாரதியார் எண்ணம்

பாரதி யென்றொரு கவிஞர் வழி
பகர்ந்திட முன்வரும் அரசியலின்
சாரதி யெனவட ஆரியர்தம்
பாரதம் காத்திடப் பண்புரிந்தார் 459

பாரதி கவியின் கருத்து

விடுதலை பெற்றது பாரதமாம்
வேந்தாம் ஆரிய நாடென்றார்
விடுதலை வீரர் ஆரியராம்
வெற்றி பெற்றது ஆரியமாம் 460

கற்பின் திறலைக் கெடுத்தது

ஐவர் மனைவி பாஞ்சாலி
அவளைப் போலே வாழென்றார்
சைவர் வைணவர் யாவருமே
சரிசரி என்றே சாற்றினரே 164

தமிழரின் துணிவின்மை

கண்ணகி வாசுகி அவ்வை பொன்முடி
கலைமுறை கற்புத் திறல்கூறி
திண்ணம தெனவே வடமுறை பலர்மணம்
தீதெனக் கூறிட அஞ்சினரே 462

இதுவுமது

வள்ளுவன் குறளுக் கிணையோ கண்ணன்
வாய்மொழி கீதை என்றமொழி
துள்ளிய நடையில் தெள்ளிதில் கூறித்
துணைவர தமிழர்கள் பிந்தினரே 463

அடிமை உணர்ச்சி

தமிழரில் அடிமையை வளர்த்தனரே
தமிழையும் மாற்றிட துணிந்தனரே
தமிழரில் வட.வரைத் தழுவியவர்
தமிழ்பிற இந்தியின் வழியென்றார் 464

இதுவுமது

பக்தர் போல வேடங்கொண்டோர்
பலரின் தலைவர் ஆயினரே
வித்தை கற்றே உண்மை மொழிவோர்
வேற்றினராக ஆயினரே 465

புலவர்கள் அடிமை

ஒழுக்கம் தவழும் புலவரெலாம்
இழுக்கங் கண்டார் இடர்கொண்டார்
வழக்கம் என்று இறைபணி கொண்ட
இழுக்குடையோரை வளர்த்தனரே

காமவெறியை வளர்த்தது

கற்பினை கெடுக்க பிறர்மனைநயவும்
காளையர் தம்மைப் பெருக்கினரே
சிற்பக் கலையில் காமச்செயலை
சிறப்பொடு நுழைத்தனர் சீரழிய 467

இதுவுமது

தமிழின் சிறந்த நறுநடை தன்னில்
தவறுடை காதலை நுழைத்தனரே
இமய வடக்கின் எழிலதை பலவாய்
இசைபட நுழைத்து பழக்கினரே 468

இழிவை சுமத்தியது

அசுரர்க ளென்றும் அரக்கர்க ளென்றும்
அறிவுடை தமிழரை குறைவு சொலி
வசைதனை காணு வழிவழி தமிழின்
வரமுறை இழிபட செய்தனரே 469

ஆரிய வேடம்

உச்சியில் சிறுமயிர் வைத்தனரே
ஒருபுரி நூலை மாட்டினரே
இச்சைக் குரிய பெண்கள்தமை
இருபிறப் பென்றே மணந்தனரே 470

கலப்பு மணம்

ஆரியப் பெண்கள் திராவிடர்கள்
ஆரியர் வாழ்வே திராவிடமாம்
ஆரியரென்று திரிதரு வோர்
அத்தனை பேரும் கலப்புமணம் 471

மறுபிறப்பைக் கற்பித்தது

இத்துணை புரட்டி லினிதுறவே
இடர்தமை பலகால் தூண்டிடவே
செத்தவர் வருதல் சீரென்று
செப்பினர் பொய்யுரை சீரியர்போல் 472

முன்னேறிய அறிவைத் தடுத்தது

உலகின் முன்னணி முதல்வரெனும்
உயரிய மதியுடை திரவிடர்கள்
உலகம் தெளிவுறு பணியதனின்
ஊக்கம் தடுத்தது ஆரியமே 473

இதுவுமது

கலையறுபத்து நான்கென கண்டு
    கடிதமிழாட்சி முறை கொண்ட
நிலைதமிழரசை மறுமையைக் காட்டி
    நெடுவளம் கெடுத்துத் தாழ்த்தினரே 474

இதுவுமது

தொல்காப் பியத்தில் கடவுளரும்
    புறநா நூற்றில் புதுமைகளும்
நல்காப் பியத்தில் தேவர்களும்
    நரகர் மக்களை நாட்டினரே 475

இதுவுமது

அறிவுடை வள்ளுவர் திருக்குறளில்
    ஆரிய வழிமுறை நுழைத்துள்ளார்
திறமுள நூல்கள் பலதினிலும்
    திருத்தித் தம்மைக் காத்துள்ளார் 476

அடிமை நூற்களைப் புதுப்பித்தது

அரசர்கள் பலரை அடிமைகளாக்கி
    ஆரிய நூற்களை அமைத்துள்ளார்
திரவிட கவிஞர் செப்பியநூற்களை
    தீய்க்கே இரையாய்ச் செய்துள்ளார் 477

ஆரியப் படை கடந்தது

திராவிட மதனில் மூவேந்தர்
    திசைதிசை எதிர்த்தார் ஆரியரை
கரவுள கடவுள் பெயரிலுள
    கதைகளின் கட்டுகள் உடைந்தனவே 478

பிறநாட்டின் சீர்திருத்தம்

வடக்கே எதிர்த்தார் புத்தர்பிரான்
வடமேல் எதிர்த்தார் கிருத்துபிரான்
திடத்தால் மகமது தானெதிர்த்தார்
திகைத்தே ஆரியம் மாறியதே 479

இதுவுமது

அமரிக்காவில் ஆப்ரகாம் லிங்கன்
அடிமை ஆரிய வளர்ச்சிதனை
தமதறிவாலே பொது அரசியலில்
தாக்கி நடுநிலை கண்டனரே 480

இதுவுமது

கிரேக்க நாட்டில் அடிமையை நீக்கிக்
கீர்த்திகள் பெற்றார் சாக்கிரடீஸ்
சிரேட்ட பிளாட்டோஅரஸ்ட் டாண்ட்டென்போர்
சீர்திருத் தத்தால் வென்றனரே 481

இதுவுமது

நிறைதரு ரஷ்யா மார்க்சின்திட்டம்
நிலமதில் லெனினும் டாலினுமே
முறைதவறாது ஆரியம் போக்கி
முதலிடம் பெற்றார் உலகமதில் 482

அவதாரம்

ஆரியம் காத்தோர் அவதாரம்
ஆரியம் அழித்தோர் அசுரரென
வீரியம் பூத்தோர் விளைநிலனாய்
வீரத் திராவிடம் மாறியதே 483

திராவிடரிடம் போர்

தேவா சுரப்போர் இராமா யணப்போர்
திராவிட வடவரின் போராமே
தேவா தியரின் அவதாரங்கள்
திராவிட தலைவரைக் கொன்றதுவே 484

இழிசெயல்

இந்திரன் என்போன் பெண்களைக்கெடுக்க
இருளில் திரிதரு மிழிதொழிலன்
முந்தியதேவர்கள் யாவரும் கலகம்
மூட்டித் திரிதரும் மூர்க்கர்கள் 485

போர்மூட்டும் புதுமை

நாரதன் கலகம் நாடறியும்
நாரணன் கலகம் ஏடறியும்
ஆரிய மென்பது பகைமையொடு
ஆட்சியில் பிளவுக ளாக்குவதே 486

இதுவுமது

பரமன் ஆரிய பரம்பரை வளர்த்திட
முனிவர்கள் வாழ்வினை கெடுத்திட்டான்
முருகன் ஆரியங்காத்திட திராவிட
சூரரை அழித்திட வேலெடுத்தான் 487

முருகன் தமிழ் வீரம்.

முருகன் தமிழ்முறை முழுதறிந்தோன்
முதல்வன் வள்ளி மணவாளன்
பெருகும் புலமையில் தெளிவுடையோன்
பெருமைத் திராவிடக் கலையறிஞன் 488

இதுவுமது

இளமைத் திறமதில் இணையற்றிடுமுறை
இலகத் தமருடன் இனமொத்தான்
வளமுற் றணிபெற வடவர்க்குறுதியின்
வகையொத் திறைநிலை வழியுற்றான் 489

வடவர்செய்த சூழ்ச்சி

இந்திரன்வளர்த்த வடமகள் யானையை
இனிதுரக் காட்டி மணஞ்சூட்டி
தந்திரமுடனே தமிழ்த் திரவிட குகன்
தயைகெட வேல்தனைத் தந்தனரே 490

தாருகாசூரனின் ஆட்சி

நிறையுள மொடுதென் னரசாட்சி
நெடிதுர பணிபுரி தாருகனின்
முறைதவ றுப்பெரு முடியாட்சி
முதுமுறை தவறிடத் தூண்டினரே 491

நாட்டைக் காட்டிக்கொடுத்தது

பெண்ணின் காமப் பித்ததில் சிக்கிப்
பிழைசொலும் யானையின் பின்செல்ல
எண்ணும் முருகன் எதிரறு திரவிட
எழில்தா ருகனினை கொன்றனனே 492

பரமனின் சிறப்பு

பரமன் என்பவன் நடமிடுவோன்
பகைமைக் கஞ்சா துணைதோழன்
பெருமான் மலைமகள் மணவாளன்
பெருநிலை கண்ட திராவிடனும் 493

கங்கையின் விளைவு

கங்கை, யென்றவட மங்கை, தன்னைமணம்
கொண்டு நின்றிமயம், சென்றதனுல்
பொங்கு,கின்ற தமிழ், குன்றி இந்திவெறி
பொங்கி, வஞ்சமதில் நின்றனனே 494

தக்கண அரசனை பகைத்தது

தக்கன் அழியத் தூண்டியதும்
தவறினை விளையத் தீண்டியதும்
தக்கண மிழிபட வேண்டியதும்
தங்கிடு கங்கையின் தூண்டுதலாம் 495

திராவிட மகளிரின் கற்பினுற்றல்

முனிவர்கள் மனையவர் தனியிடமே
முழுமதி பெறவென அணுகிடவே
கனிதரு கயமையின் கரவினதால்
கடிதினில் சேய்பழி சூடினரே 496

அவதாரத்தின் விளைவு

இரணியாக்க னெரு கருணை நோக்கனவன்
இணையிலாது புவி ஆண்ட வீரனவன்
தரணிசுற்றி தலை அணையில் வைத்தனென
தவறுகூறு கொலை அவதாரம் 497

இதுவுமது

இரணியா சுரனை கரவினே டிருளில்
இருபைவே டமொடு தருணமீ துசதி
மரணகோ லமது வடவரா தியரின்
மடிமையா குமிது கடியும் தேவர்செயல் 498

இதுவுமது

மாவலிமன்னன் மாண்புறு தென்னன்
மலிவொடு தருதயை மதிவள்ளல்
நாவலியண்ணல் நயமுறு செம்மல்
நலிதரு கொலையது அவதாரம் 499

இதுவுமது

இலங்கை வீரன் இராவணனை
எதிரே இல்லா வாலிதனை
இலங்கக் கொன்றது வடவெறியாம்
இக்கொலைக் கதிபன் அவதாரம் 500

இதுவுமது

உணவினை ஊட்டிடும் வேள்விசெயல்
ஊக்கும் பூங்கா யாகமதைத்
தணிய ஓட்டிய தாடகையைத்
தாக்கிய வடவன் அவதாரம் 501

இதுவுமது

அரசர்கள் பூண்டை அடியொடுநீக்க
ஆரிய பரம்பரை மேல்நோக்க
பரசுடன் வந்தான் படைகொடுவென்றான்
பழியுடை கொடியவன் அவதாரம் 502

இதுவுமது

முருகன் குன்றினில் தங்கியதும்
முறைதவர் காவடி தூக்கியதும்
பரமன் வடமலை தங்கியதும்
பகைமையின் வடமகள் பணியறிவீர் 503

போர்பாடியது.

போர்பாடியது:—இஃதிரண்டன் தொகை. போரைப் பாடியதை உணர்த்தும் செய்யுட் பகுதி என்பது பொருளாம்.

திராவிடப்படை, திராவிடத் தலைவர்களின் கீழ் ஒன்றுபட்டு நின்று அயலவர்களோடு போர் புரிந்தமையை இதில் அறியலாம்.

திராவிடத்தை அடிமையாக்க பலமுறை பலவகையில் போர் நிகழ்த்தினர் ஆதலின் இந்நூல் பலமுறை நடந்த போர்களைத் தொகுத்துக் கூறுகிறது.

தேர்ப்படை, யானைப்படை. குதிரைப்படை காலாட்படைகள் வீரத்தொடு போர் புரிந்து வெற்றிவிழா நடத்தியதும், படைகளின் போர் நுணுக்கங்களையும், சிறந்த பல போர்த் தலைவர்களையும் விளக்கியிருத்தலைக்காண்க.

போரின் நிலை

போருக் கிங்கே நிலையிலதைப்
புரியக் கூறும் கலையிதுவே
சீருக் கிங்கே வந்தவர்கள்
செய்திடு மமர்களின் செய்தியிதே 503

போர்க் கலை

போருக் கணிகலம் பொதுமையெனப்
போர்நெறி யறவுரை புகலுமது
போருக் கெனதனி கலையுளதால்
பூரித்திட பயில் தரலினிதே 504

போர் வழி

சொற்போர் முற்றிடில் மெய்ப்போரே
கைப்போர் நிற்றிடில் விற்போரே
மற்போர் முற்றிடில் உயிர்ப்போரே
மதிப்போர் பெற்றிடில் சமரசமே 505

வீரர்கள் நிலை.

ஓடிப் பாய்ந்தும் போர்தொடுப்பார்
ஒதுங்கிப் பதுங்கிப் போர்தொடுப்பார்
தேடிப் பாய்ந்தும் போர்முடிப்பார்
திறமை தெளிவது புதுமுறையாம் 506

போரின் விளைவு

தலையுடை, படவுடல் கிழிதரவும்
தகுமுறுப் புகழ்தனித் தனிவிழவும்
நிலைகலை வுறவிடர் பெரிதுறவும்
நிகரறு பொறுமுகம் சமர்நிலையே 507

போர் குணம்

சமரது செயுமொரு வீரன்குணம்
சாடும் பேய்நாய் புலிபோலே
சமரிடு குணமுடை தலைவர்களோ
சற்றும் தளரா தணுகுவரே 508

படைத்திறன்

பருந்துப் படைபோல் வட்டமிடும்
பாம்பைப் போலே நெளிந்தோடும்
பொருந்தும் புலிபோல் சீறிவீழும்
புதுமைப் போரின் புகலிடமே 508

படைக்கலன்கள்

வீசுங் கத்தி எரிகத்தி
குத்துங்கத்தி சுருள் கத்தி
நாசங் கக்கி வெடிசுத்தி
நாற்புற நின்று போர்முடிப்பார் 509

போர் முறைகள்

நம்மின் வலிவும் பிறர்வலிவும்
நாட்டின் வலிவும் சூழ்நிலையும்
மும்மை நிலையின் முழுவதையும்
முறையாய்த் தெளிதல் போர்முறையாம் 511

படைத்தலைவர் நிலை

காலத் தின்நிலை அறிவோரும்
கருதும் பொருநிலை தெளிவோரும்
ஞாலத் தின்சமர் புரிவோரும்
நனிசமர் தலைமைப் பூண்டிடுவார் 512

படைவீரர்கள் நிலை

காலே தலையே போனாலும்
கையே மெய்யே வீழ்ந்திடினும்
மேலே கீழே பாராமல்
மீண்டும் கொல்வார் வெல்வாரே 513

போர்வழி

நான்குடை படைநலன் தென்னகமே
நடைபரி கரிதேர் வலிவுறுமே
கோன்முறை புலம்கடல் விண்வழியும்
கொடுசமர் புரிவது தமிழறமே 514

அணிவகுப்பு முறை.

அங்கம் நான்காய் எழுவகை அணியாய்
அமர்முறை பலவாய் முனைவாகி
சிங்கம் புலிநாய் சிறுநரி எனவே
சினமிகு நிலையால் துணிகுவரே 515

வீரம் பிறக்குமிடம்

காதற் றாய்மை தனிமையிலும்
காவற் றிண்மை மதிதனிலும்
காணும் கண்ணின் கூர்மையிலும்
காலச் சீர்மை கருணையிலும்

நீதித் தாய்மை வளமதிலும்
நேயப் பாவின் துணைதனிலும்
நீளத். தீரத் திறலதனை
நேரிற் காணுத லறிகுவிரே 516

கூலிப்படை

ஊக்கத் தொல்படை வென்றிடுமே
உண்ணும் புதுபடை பிந்திடுமே
சாக்குக் கூலிகள் வீரரல
சமயந் தன்னில் ஓடுவரே 517

படைவீரர் நிலை

வீரங் குறைதரு நிலையினிலும்
வெற்றியை அடைகுவர் படைதிறனால்
தீரஞ் செறிவுறு பொருமுடிவில்
தோல்வியை அணிகுவர் படைக்கலைவால் 518

படைத்தலைவர் நிலை

கடலலை யெனநிறை படையுள தெனினது
கருதிடு தளபதி திறனிலையேல்
படுகள மிடைநடு படைமுறி தருமென
பரிவுட னறிவது திறசமராம் 519

போரின் தூய்மை

மெலியார் மேல்போர் ஆடாதே
வலியார் தாம்வரின் ஓடாதே
நலிவோர் கெடுவர் நாடாதே
நிலையாம் வலிமை சாடாதே 520

முனைவின் எழில்

எதிரெதி ருளவிரு படைகளி னொலியெழ
சதியுட னமர்செய முனைவதி னெழிலது
குதிகொளு முயிருடல் பிரிவதி னுளவதை
மதியினில் அறிதர துணிகுவ தொருவழி 521

தெற்கும் வடக்கும்

வடக்குக் கயமை வைதிகம்
வணங்கா மனத்து ஆரியமும்
திடத்துத் தெற்கு அருளறிவுத்
திறமும் போர்முனை தேர்ந்தனவே 522

இதுவுமது

அறியும் படிவட கலைகள் துகள்பட
அரிதென் றயலவர் குடியோட
செறியும் பகைகளும் சினமும் பிரிவுகள்
சிதரும் படிசமர் நடந்தனவே 523

இதுவுமது

இனிதென் திசைதனை எவருங் கருதிட
இமையும் பொருளிலை எனவேதான்
நனியும் திகழ்மதி எழிலுங் கலைமுறை
நலமும் தெளிவது சமராமே 524

படை நலன்

ஆயிர மாயிரம் வீரர்படை
ஆயிர மாயிரம் புலவர்படை
ஆயிர மாயிரம் கவிஞர்படை
அணியணி பெற்றது திரவிடமே 525

மறைமலை அடிகளார் அருட்போர்

வடபெயர் கொள்ளோம் வழிதவறில்லோம்
வகை தொகை தமிழணி பலஉடையோம்
கொடிமுடி வல்லோம் நெடுமுறைவெல்வோம்
கொடை யுடை மறைமலை கூற்றினிதே 526

திரு. வி. கல்யாண சுந்தரனார் தொழில்போர்

திருவைத் தென்னா டறிதறவே
திருக்கல் யாண சுந்தரனார்
பெருமைப் பண்புக் கணிகலனாய்ப்
பேண் தென்னாட்டைக் காத்தனரே 527

சோம சுந்திர பாரதியார் மொழிப்போர்

செந்தமிழ் ஓங்கிச் சீர்முறை தாங்கிச்
செல்வத் திராவிடம் சீர்பெறவே
இந்தியைத் தாக்கிச் செந்தமிழ் காத்தார்
எழிலுடை சோம சுந்தரனார் 528

இதுவுமது

எங்கும் திரவிட ஒலிவளர் கூட்டம்
எங்கும் துணையுடைப் பெருங் கொண்டாட்டம்
எங்கும் தமிழ்நடை அறிவினர் நாட்டம்
ஈவெ ராவின் இணையறு கூட்டம் 529

இதுவுமது

அறிவே மங்கிய காலமதில்
அறியாமைக்கு இட மிலதாய்த்
திறமை தன்னைக் காத்ததிறல்
திராவிட பெரியார் போராமே 530

இதுவுமது

தென்னில திலகம் வரதராசுலு
தேயப் பிரிவதைச் சூடினரே
முன்னிலை தன்னைக் காத்திடவரசியல்
மூதுரை யாடிய தறிவீரே 531

புரட்சிக்கவி பாரதிதாசன் கவிப்போர்

வீரச் சுவைகொடு மீறித் தமிழெழ
சாரத் தொடுமதி சீறிப் பயனுற
தீரத் திரவிடம் நேரொத் திடகவி
வீரப் பாரதி தாசன் சமர்தெளி 532

தமிழரசுப் போர்

எல்லைக் கொருவழி சொல்லிப் பெருநிலை
எண்ணித் தமிழமர் பலசெய்து
நல்லத் தமிழர சின்புற் றிலகிட
நற்பணி, செய்தார் சிவஞானம் 533

சமதர்மப் போர்

தென்னின் பொதுமைப் பொருள்களெலாம்
திகழும் மக்கள் யாவர்தமின்
தொன்மை உரிமை உடையதெனச்
சொன்னார் சீவா னந்தருமே 534

அரசியல் ஆட்சிப்போர்

ஆரியக் கொட்டம் அரசியலில்
அடங்கி வாழும் சீர்முறையை
வீரியத் திட்டம் நாட்டிடுபோர்
விளைத்தார் காம ராசருமே 535

திராவிடப் பிரிவினைப் போர்

நிறை நெஞ்சில்லா இளைஞர் தமை
நிறை நெஞ்சாக்கும் அறிவுப்போர்
திறமை தன்னால் நடத்தியது
திராவிட முன்னணிப் போராமே 536

திராவிட முன்னேற்றப் போர்

பல்லா யிரம்பேர் முன்செல்ல
சொல்லா யிரவர் பின்தொடர
எல்லா ஊர்களில் சிறப்பினொடு
அண்ணா படைகளைக் கண்டனரே 537

இதுவுமது

கணக்குத் தப்பாப் புகைவண்டி
கணக்கைத் தப்பிப் புறங்காண
பிணக்கைக் கொண்ட வடவரசின்
குணத்தைத் தடுத்துப் போர்செய்தார் 538

இதுவுமது

கல்லக் குடியின் கடிதமிழைக்
கலைத்தே வடசொல் சூட்டியதை
வெல்லக் கடும்போர் நாட்டியது
வெற்றித் தமிழின் வீரமிதே 539

இதுவுமது

தென்னாட் டினையே வடக்கென்னும்
திமைச் சொல்லினை தாக்கிடவே
என்னா டறிதர நேருதனை
எதிர்த்துத் துரத்தி வென்றனரே 540

நாட்டைக் காத்த வீரர்கள்

பலபேர் உயிர்தமை தந்தனரே
பலபேர் உடலினைத் தந்தனரே
பலபேர் அடிப்பட் டுறுப்பிழந்தார்
பலபேர் வாழ்க்கைத் துரந்தனரே 541

நீடித்த வெற்றிகள்

ஒருபோ ரல்ல இருபோ ரல்ல
ஓயாப் போரால் திருநாட்டை
உருகுலை யாமல் திருநிறைவாக
ஒளியாய் நிலையாய்க் காத்தனரே 542

வெற்றி விழாக்கள்

வாட்போர் வீரர் வலிமையொடு
வகையுடன் வென்று வெற்றிவிழா
நாட்பார்த் துரிமை பெரிதுறவே
நலமுட னடத்தினர் வீரமொடு 543

படைகளின் ஒலி

கோரச் சங்கொலி பூம்பூம்பூமென
கூடும் முரசொலி தாம்தாம்தாமென
சூரர்க் குரலொலி ஓம்ஓம்ஓமென
சீரிப் படைசெலும் காண்காண்காணென 544

படைக் கலன்கள்

வாணக் குண்டு பொறிகுண்டு
வகை வகையான தீக்குண்டு
காணக் கொண்டு முறைகண்டு
கடுகித் திராவிடர் போர்செய்தார் 545

இதுவுமது

அம்புப் பொறியும் அத்திரமும்
அணியணி யான ஆயுதமும்
நம்பும் திராவிடப் போரினிலே
நமதிடர் தீர்ந்திட வீசினரே 546

போரின் தோற்றம்

உண்மையும் பொய்யும் பகைத்ததுபோல்
வெண்மையும் கருமையும் சினந்ததுபோல்
திண்மையும் மென்மையும் முரணியபோல்
தெற்கும் வடக்கும் பகைத்தனவே 547

திரவிட வீரம்

உரிமைக் குயிரை உடனீயும்
உறுதித் தொண்டர் சண்டைதனில்
உரிமைப் பெருதல் தாங்கிடுதல்
உதவிக் குதவுதல் ஊக்குவரே 548

இதுவுமது

உருவங் கண்டே மருளாரே
பருவங் கொண்டே தளராரே
உருள்தேர் அச்சணி சிறிதாமே
உயிர்போல் உறுமிட முணருவரே 549

இதுவுமது

உறவரு மிடர்தமக் கிளேக்காரே
உயிருள உடலினில் சளேக்காரே
பெறுவதின் பயனதை மறக்காரே
பெறும்போர் வரினுமே களேக்கரரே 550

இதுவுமது

தென்னவர் போரணி சூடுவரே
திருநில அறமுறை தேடுவரே
நன்முறை பரணிகள் பாடுவரே
நந்தமிழ் இன்பினில் கூடுவரே 551

தேர்தல் போர்

தென்னுட் டரசவை சென்னேதனில்
தேர்தல் பேரால் திராவிடர்தம்
நன்வாக் குரிமை நிறைபெற்று
நம்மின் ஆட்சிகைப் பற்றினரே 552

களம்பாடியது

பல களங்கள்

நெல்லுக் களமும் சொல்லுக் களமும்
நீதிக் களமும் வெல்களமே
கல்விக் களமும் செல்வக் களமும்
கடுபோர்க் களமும் காண்பீரே 553

வடவரால் தென்னிலம் களமானது

உடலுக்குயி ரொளிதந்திடு மொருநற்செய லெனவே
உரிமைத்தெளி வதுவந்திடு முறுதிக்கள மெனவே
வடபக்கம துடைதுன்புள கயமைக்கொரு வழியாய்
திடமொத்திடு சமர்கொன்றிடு களமுற்றிய தறிவீர்

போர்களத்தின் நிலை

எங்குங் கைகால் எங்கும் மெய்த்தோள்
எங்கும் தலையுடல் குவியல்கள்
எங்கும் மலையென முண்டம் தங்கும்
எஞ்சிய குருதியின் பஞ்சணைமேல் 555

இதுவுமது

குருதிநதியலை எழவொரு புறமே
கருதி கழுகுகள் தசைதனையுணவே
குருதியிடைபுக நிறமு மறுபட
குறுகிநரிகளும் நிணமதை திருடும் 556

இதுவுமது

கருத்துப்பருத்த கரியின் துண்டம்
கனகிரி குன்றின் கல்போல
கலந்து சிதைந்த போரின்தேர்கள்
கருமலை மீதின் புதர்போல

செருக்கிமுறைத்த பரியின் துண்டம்
சிவந்த இருபுற கரைபோலே
சிறந்து மலிந்து சொறிந்தகுருதி
சினந்து வழியும் நதிபோல 557

களத்தில் ஊன் விருந்து

வட்டமொடு சுற்றிவரும் கழுகுக் கூட்டம்
வழிதவறும் கரவுடைய நரியின் கூட்டம்
சட்டெனவே கூவியுண்ணும் காக்கைக் கூட்டம்
சலிப்பின்றி உண்டுண்டு பரணிபாடும் 558

பிணத்தின் நிலை

மண்ணுடைய பாண்டம துடைபடிலோ
மதியா துடனதை வெளியிடல்போல்
திண்மையி னுடலது முறிபடலால்
தெருவினில் பொலிவற வீழ்ந்ததுவே 559

நாட்டுணர்ச்சி மிக்க உயிர்கள்

இரத்தக் களரியில் புரளுகிற
செத்துப் போகாச் சிலஉடலம்
கத்திக் கத்தி வடமடியைக்
குத்திக் குத்திச் செத்தன்வே 560

போர் வேண்டித் தவங் கிடந்தப் பேய்கள்

பசியால் வாடியப் பேய்ப்பறவை
படுகளங் கண்டுண் மிகைகண்டு
புசியா மல்போர் வாய்ப்புளதைப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்தனவே 561

பொறைமையின் ஆற்றல்

கால்கை யற்றோ னொருதொண்டன்
கருத்தின் முடிபைக் காட்டுகையில்
மேல்கீழ் நரிகடித் திழுப்பதனை
மேவிச் சகித்தே உயிர்விட்டான் 562

சொல்லும் செயலும்

பேச்சும் செயலும் கண்ணெதிரே
பிரித்துக் காட்டுதல் படுகளமே
நாச்சுட பேசிப் பயனில்லை
நடமின் வீரப் போர்க்களமே 563

வஞ்சங்கொண்ட படையின் நிலை

தீயவை நல்லவை கண்ணெதிரே
தேர்ந்துக் கொள்வது மிகவெளிது
தீயவை தீயும் நலம் நலமாம்
தீரப்படுகளப் போரினிலே 564

நாட்டுக்குயிர் நீத்த தொண்டன் நிலை

கலைதெளி உயிருடை பயன்யாவும்
கண்டிடு மிவ்வோ ருடலினிலே
நிலையுள உயரிய பதவியொடு
நீணில உரிமை நெடிதுற்றான் 565

உயிர்த் துணைவர்கள்

வீரப்போர்கள மேகித்துணையவர்
வீரங்கண்டு மகிழ்வெய்த
விரும்பிக்களமதில் பிணங்கண்டு
வெற்றிக்குறியைத் தேடினரே

வீரங்கொண்டவர் மெய்கண்டடுபுண்
வெற்றித் தோளதில்கண்டுடனே
வீரத்துடனவர் வெற்றிக்கறிகுறி
வேறெது வெனவுடனேகினரே 566

வீரத்தாய்

அங்கோர் நங்கை துணிவுடனே
அரைஉடல் கால்உடல் தனைப்புரட்டி
எங்கள் மைந்தன் வீரனென
இடியேறன்ன கூவினளே 567

போர் மகள்

வீரத்துணைவீர் நாட்டுரிமை
வெற்றிக் குயிரைத் தந்திட்டீர்
நீரத்தெழிலோ டண்டினியும்
தேரும் போரினில் உயிர்தருவோம் 568

களத்தின் ஞான நிலை

சுற்றம் நண்பும் யாவுமிலை
பற்றும் பண்பும் ஏதுமிலை
குற்றம் குறையும் காணவிலை
பற்றுகள் நீங்கிடம் படுகளமே 569

களத்தின் பயன்

அடிமை உரிமை இருமைகளும்
அளந்தே எடைபோட் டுரிமைதனை
நெடிதேவாழ வாழ்த்துரைக்கும்
நெறிமுறை யுடையது களமதுவே 570

இதுவுமது

வீரந்தாங்கும் உள்ளத்துள்
வீங்கும் வலிமை உடலத்துள்
வீரம்பொங்கும் விரிநிலமே
வீரப்போர்கள மாகுமதே 571

பேய்ப் பறவை

நிணத்தைக் கூழாய் உண்கின்ற
நிணமுண் விலங்கும் பறவைகளும்
மணத்தால் நிறைந்தே வட்டமொடு
மாறிமாறி உண்டனவே 572

இதுவுமது

உணவறு பஞ்சம் வந்திடி லன்னுள்
உணவினை அரசினர் கூழெனவே
உணவினை யுண்ணும் படிதரு வதுபோல்
ஊனுண் பேயுயிர் உண்டனவே 573

வீர வாழ்த்துக்கள்

திரவிட கொடிதனைக் கட்டிடுவீர்
செந்தமிழ் வாழ்த்தினைப் பாடிடுவீர்
திருவளராட்சியை நாட்டிடுவீர்
திகழ்தரு களவுயிர் வாழ்த்தொலியே 574

இதுவுமது

மீண்டும் அயலவர் தோன்றாமல்
மேலாய் மக்கள் வாழ்ந்திடவே
ஈண்டுத் திராவிடப் பரணிதனை
என்றும் சிறந்து பாடீரே 575

களத்தின் காட்சி

யானையின் வீரன் வெறிகொண்டு
யானையைத் தூண்டி ஏவிடவும்
யானைபொன் தூணல் வீரர்களை
எதிர்த்தே அடித்தக் குவியலிதே 576

இதுவுமது

குதிரையின் வீரன் கொடு நோக்கால்
குதிரை மீதே பாய்ந்திடலும்
குதிரை வெறிகொண் டெதிர் படையை
குழம்பால் மிதித்த குவியலிதே 577

தேரின் தலைவன் வீரமுடன்
தேர்மேல் நின்று அம்பெய்யத்
தேரின் சாரதி திறமைதனால்
சேனையின் மேலே சென்றனவே 578

பனையழித்துத் துண்டித்த பனந்துண்ட
மொப்ப தெனக் கரிகால் துண்டம்
பனையின்காய் நுங்கெடுத்த பான்மையெனக்
கண்ணிழந்தத் தலையின் துண்டம்

பனையின் கருக் கென வாள்கள்
பனையோலை யனைய தேர் பனைத்துதிக்கை
பனைக்களம் போல் போர்க்களமாம்
படுகளத்தின் பான்மை தனைப்பரிந்து காணே

ஞானநிலை காணுமிடம் தூயகுணம் தோணுமிடம்
மானமது வாடுமிடம் வீரநிலை கூடுமிடம் 580

சிறுசிறு புழுவினம் பெருஉடல் நிறைபட
சிதைவொடு கரிவன மலைகுடை பொலிவன
குறுமண மதுவயி ருழநுழை யிழிபடு
கொடுநிலை தருமது வெறியொடு வழிவன

பிறநில சூதும் தென்னில நெறியும்
பிழைமலி மறையவர் போர்நிலையில்
குறைநிறை வாதின் கோன்முறை மறைய
குடிவளம் பெருகிடு பரணியிதே 582

வாழ்த்து பாடியது.

திராவிடம் வாழி தமிழ் வாழி
திருவருள் புலவர் குழுவாழி
திராவிடர் வாழி சீர் வாழி
தென்னர சாட்சி வாழியவே 583

இணையொன் றில்லாத் தமிழாட்சி
இன்போ டாண்ட வீரர்களாம்
துணையா மிரண்யன் இரண்யாக்கன்
தொல்மா வலியும் வாழியவே 584

வள்ளல் என்ற வாய்மைதனை
வளமாய்க் காத்திடு முதல்வள்ளல்
கொள்ளும் இடைகடை வள்ளல்கள்
கொடையது நீடுற வாழியவே 585

சேரல மன்செங் குட்டுவனே
சிறந்த வடபோர் திறம்வென்று
வீரங் காத்திடு நீடுபுகழ்
விளைவொடு நாளும் வாழியவே 586

சோழர்தம் நாட்டின் அரசர்குழு
சொந்தத் திராவிட நாகரிகம்
வாழதி றங்கொடு ஆட்சிநலன்
வழிவழி திறமைகள் வாழியவே 587

பாண்டிய மன்னர் வீரமொடு
பாங்காய்த் திராவிடங் காத்தபுகழ்
வேண்டிடு தமிழவை நூல்களொடு
விழைவாய் நாளும் வாழியவே 588

பல்லவ ரரசியல் திராவிடத்தைப்
பாங்காய்க் காத்து வந்ததிறல்
எல்லவ ரறிகுவ ரெழில்கலையால்
இருநிலம் மகிழ்வுற வாழியவே 589

ஆந்திர நிலனுறை அரசியலார்
அயலவர் வரவினைத் தடைசெய்து
தீந்திற லோங்கிடும் அருஞ்செயல்கள்
திசைபல புகழுற வாழியவே 590

கன்னடர் அரசியல் கனிவுறவே
கலைகளின் நிலைகளைக் காத்ததிறல்
நன்னடை யுடனே நாடறியும்
நலமது சூழ்தர வாழியவே 591

கேரளர் அரசியல் ஆட்சியது
கேட்போர் மகிழும் சீர்த்தியது
பாரள வாம்படை பரவுபுகழ்
பணிபுரி அரசியல் வாழியவே 592

அகமே வாழி புறம்வாழி
அணியாம் ஒற்றுமை நலம்வாழி
மிகையே பொலியும் தமிழ்மறையாம்
மேலாம் பரணி வாழியவே 593

பதிப்பக வெளியீடுகள்.

திராவிடத்தின் [illegible]பக் கூறும்

★ திராவிடத்துப் பரணி ரூ. 2

திராவிட முற்போக்கைத் தூண்டும்

★ திராவிட ஆட்சி முறை ரூ. 1

(333 வெண்பா உள்ளன)

தமிழ் மொழியின் தனிச் சிறப்பை ஊட்டும்

★ தமிழன் உலா ரூ. 1

புலமையின் புத்துணர்ச்சியை வளர்க்கும்

★ புலவர் விடு தூது ரூ. 1

18-கலைகளின் வழிமுறைகளை விளக்கும்

★ படிப்பதெப்படி ரூ. 1—25

(சொற்பயிற்சிக்கு ஏற்றது)

குறளை அந்தாதியாகத் தொகுத்த

★ திருக்குறள் அந்தாதி ரூ. 1

(உரை உடன் கூடியது)

தேவையுள்ளோர் பணம் அனுப்பிப் பெறலாம்.

கிடைக்குமிடம் :

திருக்குறள் பதிப்பகம்,

இராசிபுரம். (சேலம் மாவட்டம்.)

ஸ்ரீ தனலக்ஷ்மி பவர் பிரஸ், இராசிபுரம்.